அன்புள்ள பரலோகத்தின் தேவனே, இன்றிரவு இரக்கமாயிரும். நாங்கள் களைத்துப்போய் பலவீனமாய் இருக்கிறோம். ஆனால் நித்திய ஆசீர்வதிக்கப்பட்ட தேவனே, இந்தத் தருணத்தில் நீர் உமது ஆவியை ஒரு பெருங்காற்றைப்போல அனுப்பி, இந்தக் கூட்டத்திலிருந்து அவிசுவாசம் என்ற பாவ விலங்குகளை உதறித்தள்ளும்படி நான் ஜெபிக்கிறேன். அவர்கள் குணமாகும்படி, இப்போது விசுவாசத்தாலும் வல்லமையாலும் நிரப்பப்படுவார்களாக.

சாத்தானே, உன் நாட்கள் எண்ணப் பட்டிருக்கின்றன. உன் ராஜ்யம் எண்ணப் பட்டிருக்கிறது. நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையுள்ளவனாகக் காணப்பட்டாய். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், இந்தக் கூட்டத்தை விட்டு, இந்த மக்களை விட்டு வெளியே போ.

இப்போது, உங்கள் கைகளை உயர்த்தி அவருக்குத் துதி செலுத்துங்கள், விசுவாசிக்கிற நீங்கள் அனைவரும்.

# வெளியே அழைக்கப்பட்டவர்கள்

## THE CALLED-OUT

58-0109

வியாழக்கிழமை மாலை, ஜனவரி 9, 1958

லேன் டெக் உயர்நிலைப்பள்ளி, சிகாகோ,
இல்லினாய்ஸ், அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# செய்தி: 58-0109 - **வெளியே அழைக்கப்பட்டவர்கள்**

ஆமென். [சகோதரர் ஜோசப் போஸ் சொல்லுகிறார், "தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக, நீங்கள் எங்களுடன் இருப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம்."] நன்றி, சகோதரர் ஜோசப். நாம் ஜெபம் செய்வோம். ஓ கர்த்தாவே, இன்று இரவு உம்மை ஆராதிப்பதற்காக மீண்டும் வெளியே கூடி வருவதற்குரிய சிலாக்கியத்திற்காக நாங்கள் உமக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம். உம்முடைய பிரசன்னம் நம் எல்லோரையும் ஆசீர்வதிக்கும்படி நாங்கள் கேட்கிறோம். மேலும் இன்றிரவு, தேவனுடைய ராஜ்யத் திற்காக நீர் ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துவதையும், வழிதப்பிப்போன அந்த ஆடுகளைத் திரும்பக் கொண்டுவருவதையும்



இருதயத்தோடும் விசுவாசிப்பீர்களா? ஒரு கணம் உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள். விசித்திரமாகத் தோன்றக்கூடிய ஒன்றைச் செய்யும்படி நான் உங்களிடம் கேட்கப் போகிறேன் (ஒரு நிமிடம்). தேவகுமாரன் பரலோகத்திலிருந்து வெளிப்படுத்தப்படுகிறார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியானால் உங்கள் கைகளை ஒருவரின் மேல் ஒருவர் வையுங்கள். ஒருவரின் மேல் ஒருவர் கைகளை வையுங்கள். வேதாகமம் இதைச் சொன்னது: "வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." அவர்கள் வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள்.

இப்போது, நான் ஜெபிப்பது போல நீங்களும் ஜெபியுங்கள், நான் விசுவாசிப்பது போல நீங்களும் விசுவாசியுங்கள், பிரசன்ன மாயிருக்கிற பரலோகத்தின் தேவன் உங்களை நலமாக்குவார். கிறிஸ்துவுக்குத் தங்கள் உயிரைக் கொடுத்த நீங்கள், உடனே ஒரு நல்ல சபைக்குச் சென்று, கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி ஞானஸ்நானம் பெறுங்கள்.

இருக்கிறது. கட்டி (tumor) உங்களை மிகவும் பலவீனமாக்கியது. நீங்கள் வேறு ஒருவருக்காக, ஒரு சகோதரிக்காக ஜெபிக்கிறீர்கள். அவருக்கு உயர் இரத்த அழுத்தம் இருக்கிறது. ஒரு வலுவான மனிதர், மருத்துவர், அவர் கையிலிருந்து அந்தக் கருவியை வைப்பதை நான் பார்க்கிறேன் (அது சரி). அவருக்கு இதய நோயும் இருக்கிறது. அவர் அப்படித் தட்டி, அவள் முதுகில் தட்டுகிறார்... நீங்கள் நம்புகிறீர்களா? அவர் உங்களைச் சாலி (Sally) என்று அழைக்கிறார். அது உங்கள் பெயர், ஒலாண்டர் (Olander). நீங்கள் மான்ட்கிளார் (Montclair) என்ற தெருவில் வசிக்கிறீர்கள். உங்கள் முகவரி 5526. இப்போது, நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால், கைக்குட்டையை அவரிடம் எடுத்துச் சென்று சமாதானத்தோடு செல்லுங்கள். தேவன் உங்களுடன் இருப்பாராக, உங்கள் இருதயத்தின் விருப்பத்தை உங்களுக்கு அருளுவாராக.

59 தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். நான் கிளம்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன், பையன் என்னைத் தள்ளுகிறான். இப்போது உங்கள் முழு



காணும் சிலாக்கியத்தை நாங்கள் பெறுவோமாக. ஓ நித்தியமும் ஆசீர்வதிக்கப்பட்டவருமான தேவனே, முன்னெப்போதும் இல்லாதவாறு உமது வார்த்தையின் மூலமாக எங்களோடு பேசுவீராக. பிள்ளைகள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிறப்பதைக் காண எங்கள் இருதயத்தின் விருப்பத்தை எங்களுக்குத் தாரும். பின்னர் வியாதியுள்ளவர்களையும் பாதிக்கப் பட்டவர்களையும் சுகமாக்கும்; நாங்கள் எங்களை உமக்கு ஒப்புக் கொடுக்கும்போது, இந்த ஆராதனையின் மூலம் நீர் மகிமை அடைவீராக. உம்முடைய பரிசுத்தமும் நேசமுமான குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் நாங்கள் இதை கேட்கிறோம். ஆமென். அமரலாம்.

2 இன்று பிற்பகல் எனக்கு ஒரு சிறிய உதவி வந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன், எனது நல்ல சகோதரரும் நண்பருமான சகோதரர் டாமி ஆஸ்போர்ன், சனிக்கிழமை இரவுக்காக தனது 'பிளாக் கோல்ட்' (Black Gold) படத்துடன் இங்கே வந்து சேருகிறார் என்று நான் நம்புகிறேன். பின்னர் ஞாயிற்றுக்கிழமை

பிற்பகலிலும் அவர் உதவுவார். சகோதரர் டாமி பிரசங்கித்து வியாதியுள்ளவர்களுக்காக ஜெபம் செய்வார், எனவே கர்த்தருடைய பெரிய ஊழியரான சகோதரர் டாமி ஆஸ்போர்னை நீங்கள் விரும்புவீர்கள் என்று எனக்குத் தெரியும். இப்போது, இன்றிரவு கர்த்தருக்கு சித்தமானால்... என்னிடம் இரண்டு வேதாகமங்கள் உள்ளன, இரண்டிலிருந்தும் நான் முழுமையாகப் பிரசங்கிக்க விரும்பவில்லை, ஆனால் ஒன்றிலிருந்து ஒரு வேதபகுதியை வாசிக்க விரும்புகிறேன், பின்னர் மற்றொன்றிலிருந்து ஒரு மையக் கருத்தை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

3 லூக்கா சுவிசேஷ புத்தகத்தில், 17-ம் அதிகாரம், 26-ம் வசனத்திலிருந்து நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

**நோவாவுடைய நாட்களில் நடந்தது போலவே, மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்.**

**நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், பெண் கொண்டார்கள், பெண் கொடுத்தார்கள்;**



நோயைப் பற்றி மறந்துவிடுங்கள், நீங்கள் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்தால், அவருடைய இரக்கமும் கிருபையும் உங்களைத் தொட்டிருக்கிறது. அது பரலோகத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட தேவகுமாரன். போய், விசுவாசியுங்கள்.

58 நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள், ஐயா. உங்கள் இருதயத்தில் சந்தோஷம் இருக்கிறது, ஏனென்றால் நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எதைப் பற்றி ஜெபிக்கிறீர்கள் என்று கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினால், அது நடக்கும் என்று நீங்கள் நம்புவீர்களா? அது உங்கள் மனைவிக்காக. அவருக்கு இரண்டு முறை பக்கவாதம் (strokes) ஏற்பட்டிருக்கிறது. அவருக்கு இடுப்பு எலும்பு முறிவு (broken hip) இருக்கிறது. விசுவாசியுங்கள், தேவன் அதை உங்களுக்காகப் பார்த்துக்கொள்வார். ஆமென்.

நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் ஒரு அறுவை சிகிச்சை செய்திருக்கிறீர்கள், அது உங்களை மிகவும் பலவீனமாக்கியிருக்கிறது, உங்களுக்கு இரத்த சோகை (anemic)

*சிறிய குழந்தையைப் பற்றி அவர் இதயம் தாக்கப்பட்டது.*

*அவர் உடனே ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கப் போகிறார், அவர் பதட்டமாக இருக்கிறார், ஆனால் பயப்படாதீர்கள், சகோதரி. தேவன் மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியே நடக்கிறார். அவர் உங்களை விடுவிப்பார்.*

*ஐயா, நீங்கள் ஏன் கண்களைத் துடைக்கிறீர்கள்? தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, அந்த வயிற்றுப் பிரச்சனையிலிருந்து குணமாகி, அவர் உங்களை நலமாக்கக் கூடாது? நீங்கள் இப்போது குணமாகிவிட்டீர்கள் என்று நம்புகிறீர்களா? சரி, அப்படியானால், போய் உங்கள் இரவு உணவைச் சாப்பிடுங்கள். ஆமென்.*

*நீங்கள் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்க வில்லையா? அங்கே கீழே கடைசியில் இதய நோயுடன் இருப்பவர், தேவன் உங்களை நலமாக்குவார் என்று நம்புகிறீர்களா? உங்களால் விசுவாசிக்க முடிந்தால். அது உங்களை ஆச்சரியப்படுத்தியது, இல்லையா? உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள். சரி, இதய*



**ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப் போட்டது.**

**லோத்துவின் நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள்;**

**லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது.**

**மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்.**

இப்போது, ஒரு தலைப்பு வழியாக... நான் ஒரு முன்னுரைக்காக அதை வாசித்தேன். ஆதியாகமம் 19-ம் அதிகாரம் 22-ம் வசனத்தில் உள்ள ஆசீர்வதிக்கப்பட்ட வேத வாக்கியங்களில், அது இப்படியாக வாசிக்கிறது:

**... அங்கே ஓடித் தப்பித்துக்கொள்;**

**நீ அங்கே போகுமளவும் நான் ஒன்றும் செய்யக்கூடாது...**

கர்த்தர் அனுமதிப்பாரானால், இன்றிரவு ஒரு தலைப்பாக, 'வெளியே அழைக்கப் பட்டவர்கள்' (The Called-Out) என்பதை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

4 நேற்றைய தினம் மாலை 'சுவரில் கையெழுத்து' (The Handwriting On The Wall) என்ற தலைப்பில் பேசுவது என் இருதயத்தில் வைக்கப்பட்டது. கர்த்தர் நம்மை ஆசீர்வதித்தார். அவர் நம்மை ஆசீர்வதித்தது மட்டுமல்லாமல், அவருடைய வார்த்தையை நாம் வாசிக்கச் செய்தும், மிக நெருங்கி வந்திருக்கும் காரியங்களை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தும்படி செய்தும் தமது ராஜ்யத்தை முன்னெடுத்துச் சென்றார். அப்படிச் செய்கையில், நவீன பாபிலோனை பெரிய நவீன அமெரிக் காவுடன் ஒப்பிட்டோம். மேலும், இன்று நம்முடைய இந்த தேசத்தில், சுவரில் கையெழுத்து தோன்றியபோது அவர்கள் இருந்த அதே வகையான இக்கட்டான நிலையில் நாமும் இருப்பதைக் கண்டோம். நமக்கும் சுவரில் ஒரு கையெழுத்து இருப்பதையும், தார்மீக ரீதியாகப் பேசும் போது அதே நிலைமைகள் இருப்பதையும் நாம்



எனது வலதுபுறத்தில் இங்கே பின்னால் ஒரு சிறிய பெண்மணி அமர்ந்திருக்கிறார். அவர் தனது மடியில் ஒரு சிறிய குழந்தையை வைத்து ஆட்டிக் கொண்டிருக்கிறார். அவர் பய பக்தியுடன் தலையைத் தாழ்த்தி ஜெபித்துக் கொண்டிருந்ததிலிருந்து இப்போதுதான் கண் களை உயர்த்தினார், ஏனென்றால் அவர் தன் குழந்தைக்காக ஜெபிக்கிறார். அது உண்மை, அம்மா. அந்தக் குழந்தையின் பிரச்சனையை கர்த்தராகிய தேவன் எனக்கு வெளிப் படுத்தினால், நீங்கள் கேட்பதை ஏற்றுக் கொள்வீர்களா? நீங்கள் சுகத்தைக் கேட்கிறீர்கள். குணமாக்க எனக்கு வல்லமை இல்லை. நான் சுவிசேஷத்தின் ஊழியன் மட்டுமே. ஆனால் உங்கள் சிறிய குழந்தைக்குத் தலையில் ஒரு தோல் வெடிப்பு (breaking out) இருக்கிறது. அது உண்மை. இப்போது, நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால், நீங்கள் கேட்பதைப் பெற்றுக்கொள்வீர்கள்.

57 உங்களுக்குப் பின்னால் இருக்கும் சிறிய பெண்மணி மிகவும் பதட்டமாக இருக்கிறார், அவர் எந்த நேரத்திலும் தாயாகப் போகிறார். அவர் அழுது கொண்டிருக்கிறார், ஏனென்றால்

பார்வையாளர்களும் அதை ஏற்றுக்கொண்டு, "கர்த்தர் இந்தப் பெண்ணுக்கு அவள் இருதயத்தில் உள்ளதையே வெளிப்படுத்தினால், நான் இனி சந்தேகிக்க மாட்டேன், ஆனால் விசுவாசிப்பேன்" என்று சொல்வார்களா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

வரிசையின் இறுதியில் அங்கே அமர்ந்திருக்கும் ஐயா, நீங்கள் கவலைப் படாமல், உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால், நீங்கள் மிகவும் கவலைப்படும் அந்த இதய நோயிலிருந்து தேவன் உங்களைக் குணமாக்குவார். உங்கள் விசுவாசம் அதைச் செய்தது, அவருக்குப் பக்கத்தில் இருக்கும் சிறிய பெண்மணி. இப்போது விசுவாசித்து பிழைத்திருங்கள்.

56 தேவனுடைய வார்த்தையிலிருந்து நான் சத்தியத்தைப் பிரசங்கித்தேன் என்று விசுவாசிக்க உங்கள் விசுவாசத்திற்கு நான் சவால் விடுகிறேன். தூதர் என்ன சொன்னார்? "நீ மக்களை உன்னை நம்ப வைத்து, நீ ஜெபிக்கும் போது உண்மையாக இருந்தால், ஜெபத்திற்கு முன்னால் எதுவும் நிற்காது."



கண்டறிந்தோம். அந்த நாட்களில் அவர்கள் மறுமனையாட்டிகள் என்று அழைக்கப்பட்ட ஒழுக்கங்கெட்ட பெண்களுடன் திராட்சரசம் குடித்துக் கொண்டி ருந்தார்கள், இன்று அவர்கள் சினிமா நட்சத்திரங்கள் என்றும், இன்னும் பலவாறாகவும் அழைக்கப்படுகிறார்கள். அவர் கள் அப்போது தங்கள் வகுப்பாரோடு மட்டுப் படுத்தப்பட்டிருந்தார்கள், ஆனால் இப்போது அவர்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடக்கிறார்கள்.

5 பாவம் ஒரு தட்டில் உடைக்கப்பட்ட முட்டையைப் போல இருக்கிறது. பாவம் என்பது நடுவில் இருக்கும் மஞ்சள் கரு போன்றது. அதை 'யோக்' (yolk) என்று அழைப்பார்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் அந்த மஞ்சள் கருவைத் தொட்டுக் கலைக்கும்போது, அது முட்டை முழுவதும் சிதறுகிறது. பாவமும் அப்படித்தான் இருக்கிறது. நீங்கள் அதை வணிகமயமாக்கி, அதை அலங்கரித்து, பார்ப்பதற்கு அழகாக மாற்றி, அதற்கு வேறொரு பெயரைக் கொடுக்கும்போது, அதை எல்லா இடங்களிலும் சிதறடிக்கிறீர்கள். அதுதான் நமது இந்தச் சிறந்த அழகான

தேசத்தில் பாவம் செய்திருக்கிறது. அது கவர்ச்சிகரமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது. பாவம் கவர்ச்சியாகி விட்டது.

பல வருடங்களுக்கு முன்பு, அவர்கள் பழைய 'சார்லி பார்லிகார்ன்' (Charlie Barleycorn) என்ற ஒரு பயங்கரமான தோற்றமுடைய, காதுகள் வரை தொப்பியை இழுத்துவிட்டுக் கொண்ட, ஏதோ வரலாற்றுக்கு முந்தைய விலங்கு போல தோற்றமளிக்கும் ஒருவரைக் கொண்டிருந்தார்கள். அதுதான் சில வருடங்களுக்கு முந்தைய சார்லி பார்லிகார்ன் (குடிப் பழக்கத்தின் உருவகப்படுத்தல்). இன்று அவர் பளபளப்பாக்கப்பட்டுள்ளார். அவர் இப் போது 'பம்பர்' என்று அழைக்கப்படும் ஒன்றில் இருக்கிறார், மேலும் பல கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களின் குளிர்சாதனப் பெட்டிகளிலும் அவர் பிரபலமாக இருக்கிறார். அது உண்மைதான். ஆனால் அவர் அதே பழைய பொல்லாத பிசாசுதான்.

6 முன்பு சில நேரங்களில் பாட்டிமார்கள், பல் வலிக்கு ஒரு பழைய மூங்கில் குழாயைப் புகைப்பார்கள். ஆனால், ஓ, அந்தப் பிசாசு



சீனாவிலிருந்து திரும்பிய மிஷனரி. அவர் இப்போது வலது மார்பில் புற்றுநோயால் சாகும் தறுவாயில் இருக்கிறார். அவர் பிழைக்க முடியாது என்று மருத்துவர் சொல்கிறார். ஆனால் உங்கள் கையில் இருக்கும் கைக்குட்டையை எடுத்து, கர்த்தருடைய நாமத்தில் அவருக்கு அனுப்புங்கள், அவர் தேவனுடைய மகிமைக்காகப் பிழைப்பாராக. 'கர்த்தர் இவ்விதமாய் சொல்லுகிறார்', அது அப்படியே ஆகக்கடவது. போய், விசுவாசி யுங்கள், சந்தேகிக்காதீர்கள்.

உங்களால் விசுவாசிக்க முடிந்தால், எல்லாம் கூடும்.

55 நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள் என்று நினைக்கிறேன். கர்த்தராகிய இயேசு உங்கள் இருதயத்தின் இரகசியத்தை எனக்கு வெளிப்படுத்தினால், அல்லது உங்கள் வாழ்க்கையில் கடந்த காலத்தில் இருந்த ஒன்றை எனக்குத் தெரியப்படுத்தினால், நான் தேவனுடைய வார்த்தையிலிருந்து சத்தியத்தைப் பிரசங்கித்தேன் என்று உங்களுக்கு அந்நியனான என்னை நீங்கள் நம்ப முடியுமா?

வயிற்றின் ஒரு பகுதி அகற்றப்பட்டது. உங்களால் அதிகம் சாப்பிட முடியாது. அவர் உங்களைக் குணமாக்குவார் என்று நம்புகிறீர்களா? நம்புகிறீர்களா?

நான் உங்களுக்கு வேறு ஏதாவது சொல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், ஏனென்றால் உங்கள் இருதயத்தில் ஒரு பாரம் இருக்கிறது. உங்கள் பாரத்தை என்னால் அறிய முடியாது, அம்மா, இயேசு கிறிஸ்து அதை வெளிப்படுத்தினால் ஒழிய. அவர் அதை வெளிப்படுத்துவார் என்று நம்புகிறீர்களா? அவர் அதை வெளிப்படுத்தினால் அவருக்குத் துதி செலுத்துவீர்களா?

இது வேறு ஒருவருக்காக, அது உங்கள் சகோதரி. உங்கள் சகோதரி இந்த நாட்டில் இல்லை. அவர் ஒரு வெப்பமான நாட்டில், தெற்கே, அட்லாண்டா, ஜார்ஜியா என்ற இடத்தில் இருக்கிறார். அந்தப் பெண்ணைப் பற்றி விசித்திரமான ஒன்றை நான் பார்க்கிறேன். அவர் ஒரு பயணத்தில் இருந்திருக்கிறார், அல்லது அவர்... அவர் ஒரு ஊழியர் அல்லது மிஷனரி. அவர் மஞ்சள் நிற மக்கள் இருந்த இடத்தில், சீனாவில் இருந்திருக்கிறார். அவர்



எவ்வளவு பிரபலமாகி விட்டான். மகள், தாய் மற்றும் சிறு குழந்தைகள் கூட புகை பிடிக்கிறார்கள், அது பிரபலமாக இருக்கிறது, ஆனால் அது பாவம்தான். அது வேறொரு பெயரில் மறைந்திருக்கிறது.

சூதாடுவது மக்களுக்குத் தவறாக இருந்தது. மரியாதைக்குரிய மக்கள் செல்லாத சலூன்கள் போன்ற தகாத இடங்கள் இருந்தன. முன்பு பெண்கள், ஒரு சலூன் இருக்கும் தெருவில் வரும்போது, அவர்கள் மறுபக்கத்தில் கடந்து செல்வார்கள். ஆனால் இன்று அவள் மதுக்கடை மேஜையில் (bar) தன் காலை வைத்து, குழந்தைகளை ஏதோ ஒரு குழந்தை காப்பவரிடம் விட்டுவிட்டு, ஒரு தாயாக இருப்பதற்குப் பதிலாக ஒரு மதுக்கடைப் பூச்சியாக (barfly) மாறி விட்டாள். அவள் அதிகம் பிரபலமாகி விட்டாள்.

மேலும் சூதாட்டம், முன்பு அது பாதாள உலகின் குகைகளிலும் தாழ்வான இடங்களிலும் இருந்தது, ஆனால் இப்போது விருந்தினர்கள் வரும்போதெல்லாம், அவர்கள் சீட்டுக்

கட்டுகளை எடுத்து விளையாட ஆரம்பிக்கும் அளவுக்கு ஆகிவிட்டது.

அது இன்னும் பாவம்தான். உங்கள் பாவத்திற்காக தேவன் உங்களை விலைக் கிரயம் கொடுக்க வைப்பார். அவர் பாவத்தை வெறுக்கிறார், ஏனென்றால் அவர் பரிசுத்த தேவன். ஒரு பரிசுத்த தேவனால் பாவத்தைச் சகித்துக்கொள்ள முடியாது. அவரால் பாவத் தைத் தாங்க முடிந்திருந்தால், முதல் பாவம் செய்யப்பட்டபோதே அவர் முழுவதையும் தடுத்து நிறுத்தியிருப்பார். ஆனால் பாவத்திற்கு மரணம் தேவை, அப்படிச் செய்கிறவர்கள் அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவர் களாயிருக்கிறார்கள். அது நோகப்பண்ணும் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் அதைச் செய்வதற்கே அர்த்தப் படுத்துகிறேன்: நோகப் பண்ணுவதற்கே.

7 அந்தப் பெரிய தீமைகளின் மூலம், இந்த நாட்டிற்கு வரவிருக்கும் நியாயத் தீர்ப்புகளின் வீச்சை நாம் காண்கிறோம், ஏனென்றால் தேவன் நம்மைப் பாவத்துடன் தப்பித்துப்போக விட முடியாது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் விதத்தில் நம்மை வாழ விட்டு, அதற்கான



உங்களுக்கு எழுதிக் கூறினார். உங்கள் சகோதரர்களில் ஒருவருக்குக் காலில் பிரச்சனை இருக்கிறது, மற்றவருக்கு மனநலக் குறைபாடு (mental deficiency) இருக்கிறது. அது முற்றிலும் சரி. உங்கள் கண்ணீரைத் துடைத்த கைக்குட்டையை எடுத்து, அதை அவர்களுக்கு அனுப்புங்கள். சந்தேகிக்காதீர்கள், கர்த்தர் அவர்களை நலமாக்குவார். ஆமென். தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்.

54 சந்தேகிக்காதீர்கள். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.

நீங்கள் எனக்கு அந்நியர் என்று நினைக்கிறேன். இப்போது, நீங்கள் ஜெபிக்கிறீர்கள். விசுவாசியுங்கள். இப்போது, பலர் ஜெபிக்கும்போது அது என்னை நிலைகுலையச் செய்கிறது. தேவகுமாரன் பரலோகத்திலிருந்து இரக்கமாகத் தமது சபைக்கு வெளிப்படுத்தப்படுகிறார்.

நீங்கள் மிகவும் பதட்டமாக இருக்கிறீர்கள், ஒரு அறுவை சிகிச்சை செய்திருக்கிறீர்கள், அது வயிற்றில். அறுவை சிகிச்சையில் உங்கள்

53 அதை நம்புகிறீர்களா? நம்புகிறீர்களா? எனக்குப் பதிலளிக்க நீங்கள் கொஞ்சம் பயப்படுகிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன். நீங்கள் என்னைப் பார்த்து பயப்படுவதால் அல்ல, உங்கள் பேச்சின் காரணமாக. நீங்கள் ஒரு ஜெர்மானியர். அது முற்றிலும் சரி. ஆனால் உங்களுக்கு மூட்டு வலி (arthritis) இருக்கிறது, அதற்காகத் தான் நான் ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். கர்த்தராகிய இயேசு உங்களை ஆசீர்வதித்து, உங்களைக் குணமாக்கி, உங்களை நலமாக்குவார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? நம்புகிறீர்களா?

நீங்கள் வேறு ஒருவருக்காக ஜெபிக்கிறீர்கள். அது சரி. உங்களுக்கும் அந்த மக்களுக்கும் இடையில் தண்ணீர் இருக்கிறது, நிறைய தண்ணீர். அவர்கள் இருக்கும் நாடு பிரான்சுக்கு அப்பால் உள்ளது, அது ஜெர்மனி. நீங்கள் ஜெபிப்பது ஒரு சகோதரி மற்றும் இரண்டு சகோதரர்களுக்காக, அவர்கள் இப்போது ஜெர்மனியில் இருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்க்கிறேன். உங்கள் சகோதரி இதய நோய் மற்றும் பித்தப்பை (gallbladder) பிரச்சனையால் அவதிப்படுகிறார், அவர் அதை



தண்டனையை நமக்குக் கொடுக்காமல் அவரால் ஒரு நீதியுள்ள தேவனாக இருக்க முடியாது. நான் முன்பே சொன்னது போல், மீண்டும் சொல்கிறேன்: பரலோகத்தின் தேவன் நாம் செய்வதைச் செய்து விட்டுத் தப்பித்துப்போக அனுமதித்தால், அவர் நீதியுள்ளவராக இருப்பதற்கு, சோதோமையும் கொமோரா வையும் உயிர்த்தெழுப்பி, அவற்றை அழித்த தற்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்; ஏனென்றால் நாம் அவர்களைப் போலவே மோசமாக இருக்கிறோம், ஒருவேளை அதைவிட மோசமாகவும் இருக்கலாம்.

இப்போது, தங்களுக்குள் உண்மையான தேவ ஆவியின் சிறிதளவு இருப்பவர் களாயினும், வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் சூடான வெடிப்பை உணர முடியும். ஏதோ ஒன்று சம்பவிக்கப் போகிறது என்பதை உங்கள் ஆவியில் நீங்கள் பகுத்தறிந்து தெரிந்துகொள்ள முடியும். உலகம் முழுவதும் நடுங்கிக் கொண்டிருக்கிறது; சிறிய நாடுகள், பெரிய நாடுகள் என அனைத்தும்; ஏனெனில் போல்ஷ்விக்குகள் (Bolsheviks), கம்யூனிஸ் டுகள், தேவபக்தியற்ற, இரக்கமற்ற, இருதய

மற்ற கூட்டங்களின் கைகளில், இந்த உலகத்தை ஒரே நிமிடத்தில் சாம்பலாக்கும் சக்தி இருக்கிறது. தேவனுடைய இரக்கங்கள் நீடிய பொறுமையாய் இருப்பது மட்டுமே அதைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. விடிவதற்குள் நாம் ரஷ்யாவின் செயற்கைக் கோளாக மாறக்கூடும். ஆனாலும் நாம் அதைக் கவனிப்பதில்லை, நாம் அப்படியே போய்க்கொண்டிருக்கிறோம்; உலகம் ஒரு நரம்பு தளர்ச்சி அடைந்திருக்கும்போது, இந்த நடுக்கமான நிலை என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. மனநல மருத்துவர்களுக்கே நரம்புத் தளர்ச்சி ஏற்படுகிறது.

8 இயற்கையானது ஒருபோதும் இயற்கைக்கு அப்பாற்பட்டதை விளக்க முடியாது; மந்திரவாதிகளாலும் ஜோதிடர்களாலும் சுவரில் உள்ள கையெழுத்தை ஒருபோதும் வாசிக்க முடியவில்லை. அதைச் செய்வதற்கு ஆவியால் நிரப்பப்பட்ட மனிதன் தேவைப்பட்டான். அந்த ஜோதிடர்களால் அந்நிய பாஷைகளை வாசிக்க முடிய வில்லை. இயற்கைக்கு அப்பாற்பட்டதை அறிந்துகொள்ளும் வியாக்கியான வரம் அவர்களுக்கு இல்லை. ஆகையால், அது எதைப்



நம்புகிறீர்களா? அங்கே ஓரத்தில் அமர்ந்திருக்கும் சிறிய கறுப்பினப் பெண்மணி, தேவன் இப்போது உங்களைத் தொட்டார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? உங்களுக்கு இருந்த மூலநோய் (piles) போய்விட்டது என்று நம்புகிறீர்களா? அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து, நான் உங்களை அழைக்காததால் கொஞ்சம் ஆச்சரியப்பட்டு கையை உயர்த்தியவரே. நான் தேவனுடைய ஊழியன் என்று நீங்கள் என்னை நம்புகிறீர்களா? நம்புகிறீர்களா? உங்கள் கண்களில் உங்களுக்குப் பிரச்சனை இருக்கிறது. அது சரி. அது 'கர்த்தர் இவ்விதமாய் சொல்லுகிறார்'. சரி, நீங்கள் வீட்டிற்குச் சென்று நலமாயிருக்கலாம். நீங்கள் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டீர்கள். ஆமென்.

இயேசு நேற்றும் இன்றும்... அந்த நபர் எதைத் தொட்டார்? அவர்கள் என்னிடமிருந்து நாற்பது அடி தூரத்தில் இருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் என்னைத் தொடவில்லை. ஆனால் அவர்கள் பிரதான ஆசாரியரைத் தொட்டார்கள், அவர் மனித உதடுகளைப் பயன்படுத்தித் திரும்பப் பேசினார். பார்த்தீர்களா?

அவர் ஒரு சுரப்பி பிரச்சனையிலிருந்தும் குடல் பிரச்சனையிலிருந்தும் இப்போதுதான் குணமாகி யிருக்கிறார். அவர் ஒரு நரம்பு தளர்ச்சியுள்ள பெண்ணாக இருந்தார். பின்னர் நான் இன்னொருவர் தோன்றுவதைக் காண்கிறேன், அது சில காலத்திற்கு முன்பு, என் கூட்டத்தில் குணமாக்கப்பட்ட ஒரு சகோதரி. அவருக்குப் புற்றுநோய் இருந்தது, அவர் குணமாக்கப் பட்டார்.

நீங்கள் இந்த ஊரைச் சேர்ந்தவர் அல்ல, நீங்கள் டெட்ராய்ட், மிச்சிகனைச் சேர்ந்தவர். உங்கள் பெயர் ஐரீன் (Irene), உங்கள் கடைசி பெயர் டன் (Dunn). உங்கள் சகோதரியின் பெயர் வயோலா (Viola) போன்றது. வீட்டிற்குச் சென்று நலமாயிருங்கள், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், நீங்கள் கேட்டதைப் பெற்றுக்கொள்வீராக. ஆமென்.

விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்.

52 நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அம்மா? கடைசி நாட்களில் இரக்கத்தில் தம்மை வெளிப்படுத்தும் தேவனிடமிருந்து இந்தக் காரியங்கள் வருகின்றன என்று நீங்கள்



பற்றியது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அதுதான் இன்றைய உலகத்தின் நிலை. அவர்கள் ராக்-அண்ட்-ரோல் விருந்துகளிலும், தங்கள் தேவாலயங்களில் பெரிய கொண்டாட் டங்களிலும், மலர்களைப் பற்றிய குளிர்ந்த சடங்குப் பிரசங்கங்களிலும் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள்; சுவிசேஷம் புறக் கணிக்கப் பட்டிருக்கிறது. மேலும் இயற் கைக்கு அப்பாற்பட்டதைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது.

எல்லா இடங்களிலும் போதிக்கப்பட வேண்டிய கர்த்தருடைய வருகையைப் பற்றிய இந்தச் செய்தியைப் பற்றி நீங்கள் அவர்களிடம் பேசலாம், ஆனால் அவர்கள் அதைப் பார்த்து சிரிக்கிறார்கள், அது தேசங்களில் மிகவும் தேவையான செய்தியாக இருக்கிறது. ஆனால் ஆவிக்குரிய மக்கள், மறுபடியும் பிறந்தவர்கள், ஏதோ ஒன்று சம்பவிக்கப் போகிறது என்று அறிவார்கள், அவர்கள் அதைக் குறித்து மகிழ்ச்சி யடைகிறார்கள். ஏனென்றால் இது கர்த்தராகிய இயேசு தமது சபைக்காக இரண்டாம் முறை வருவதைக் குறிக்கிறது. ஆனால் இரட்சிக்கப் படாதவர்களுக்கு, இது எதைப் பற்றியது என்றே

தெரியவில்லை. இது ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட அசைவாகத் தெரிகிறது.

9 கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு பம்பாய், இந்தியாவில் கர்த்தர் எனக்கு அனுமதித்த மிகப் பெரிய கூட்டங்களில் ஒன்றை நடத்தும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அங்கே செல்வதற்கு சற்று முன்பு, நான் அவர்களின் தேசத்தைப் பற்றி அதிகம் படித்தேன்; பெல்ஷாத்சாரிடமிருந்து பாபி லோனைக் கைப்பற்றிய மேதிய-பெர்சியர்கள், அங்கே குடியேறினார்கள் என்றும், இன்று இந்துக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் என்றும் கண்டறிந்தேன். பின்னர் நான் அவர்களின் செய்தித் தாள்களில் (இன்றும் அதன் நறுக்கு என்னிடம் உள்ளது), திடுக்கிட வைக்கும் ஒன்றை வாசித்தேன். ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றும் ஒன்றை நான் வாசிக்கும்போது, அதை வைத்துக் கொள்ள விரும்புகிறேன்; ஏனென்றால் ஏதேனும் அர்த்தம் இல்லாமல் தேவன் ஒருபோதும் அசைவாடுவதில்லை.

அவர்கள் தங்கள் செய்தித்தாளில் சொல்லியிருந்ததை நான் வாசித்துக் கொண்டி



கூட்டத்தில் இருந்தீர்கள், ஆனால் மேடையில் அல்லவா? இங்கே, சரி. அப்படியானால் நாம் ஒருவருக்கொருவர் முற்றிலும் அந்நியர்கள்.

51 இப்போது, நீங்கள் எதற்காக இங்கே இருக்கிறீர்கள் என்று அவர் தெரியப்படுத்தினால், அது அப்படித்தானா இல்லையா என்பதை நீங்களே நிதானிக்கலாம். உங்களுக்குத் தெரியும். ஏதோ ஒன்று நடக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள், ஒருவேளை நீங்கள் இதற்கு முன் உணராத ஒரு உணர்வு, ஒரு உண்மையான இனிமையான, தாழ்மையான உணர்வு. உங்களுக்கும் எனக்கும் இடையில் நிற்கும் அந்த ஒளிதான் கர்த்தருடைய தூதர். அந்த இளம் பெண்ணை நான் பார்க்கிறேன், அவள் தன் இதயத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு இதய நோய் இருக்கிறது. அவளுக்கு ஏதோ மூச்சுத் திணறல் போன்ற பாதிப்பு இருக்கிறது. அவள் மூச்சுத் திணறுகிறாள். அது 'கர்த்தர் இவ்விதமாய் சொல்லுகிறார்'.

அது சரி. நீங்கள் வேறு ஒருவருடன் பேசிக்கொண்டிருந்ததை நான் பார்க்கிறேன், ஏதோ ஒன்றைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் ஒரு உறவினர். அது உங்கள் சகோதரி,

அவருக்கு மூட்டு வலி மற்றும் இதய நோய் இருக்கிறது. அது 'கர்த்தர் இவ்விதமாய் சொல்லுகிறார்'. நீங்கள் இப்போது நம்புகிறீர்களா? நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் விசுவாசித்தபடியே உங்களுக்கு ஆகும். கர்த்தர் உங்களுடன் இருப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரியே.

50 நீங்கள் விசுவாசித்தீர்களா? இப்போது, உண்மையான பயபக்தியுடன். வணக்கம்? எனக்குத் தெரிந்தவரை, இளம் பெண்ணே, நான் உங்கள் முன்னிலையில் நிற்பது அல்லது நீங்கள் என் முன்னிலையில் நிற்பது இதுவே முதல் முறை. அது அப்படித்தான் என்று நான் நினைக்கிறேன். அப்படியா? அப்படியானால், உங்கள் கையை மட்டும் உயர்த்துவீர்களா? இப்போது, இங்கே ஒரு வெள்ளை இனப் பெண், வெள்ளை இன மனிதர். இப்போது, வெள்ளை இன மக்களே, என் வாழ்நாளில் நான் பார்த்திராத, என்னைத் தெரியாத, என்னைப் பார்த்திராத இந்த பெண்ணுக்குக் கர்த்தராகிய இயேசு தம்மை வெளிப்படுத்தினால்... ஒருவேளை எங்காவது ஒரு கூட்டத்தில் இருந்திருக்கலாம். நீங்கள் ஒருமுறை ஒரு



ருந்தேன்: அவர்களின் நாட்டின் பெரும் பகுதியை உலுக்கிய ஒரு பெரிய பூகம்பம் அப்போதுதான் ஏற்பட்டிருந்தது; சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் சொந்த அமெரிக்க செய்தித்தாள்களில் அதைப் படித்திருப்பீர்கள். இந்த பூகம்பம் தாக்குவதற்கு சுமார் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு, ஒரு பெரிய விசித்திரமான சம்பவம் நடந்தது என்று சொல்லப்பட்டது; அதாவது சுவர்களுக்கு அருகில் நின்றுகொண்டிருக்கும் எல்லா ஆடுகளும் கால்நடைகளும்...

10 இந்தியாவில், வேலிகளுக்குப் பதிலாக சுவர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களின் தொழுவங்கள் பல கல்லால் கட்டப் பட்டவை. கால்நடைகள் சுவரின் நிழலில் நின்று கொண்டிருக்கும் இடத்திலிருந்து, எல்லா கால் நடைகளும் ஆடுகளும் வயலின் நடுப்பகுதியை நோக்கி ஓடின. பூகம்பம் ஏற்படுவதற்கு முன்பே, சுவர்கள் தங்கள் மேல் விழுந்துவிடும் என்பதால், தொழுவங்களின் இடுக்குகளில் கூடு கட்டியிருந்த சிறிய பறவைகள் காட்டிற்குள் பறந்து சென்றன. அவற்றை வெளியே விரட்ட யாரும் இல்லை. பூகம்பம் வருகிறது என்பதைக்

காட்ட எந்த ஒரு நேரடி அடையாளமும் இல்லை. ஆனால் தேவன் தம்முடையவர்களைப் பராமரிப்பதால், அவைகளுக்கு ஒரு உள்ளுணர்வு இருந்தது. ஆபத்திலிருந்து விலகிச் செல்லும்படி அவை பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டன.

தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதர்கள், இந்த பெரிய அழுத்தம் வருவதை உணர்ந்து, பாதுகாப்பிற்குச் செல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அவர்கள் அதைச் செய்வதில்லை. அவர்கள் கேட்க மாட்டார்கள். எச்சரிக்கும் தேவனுடைய சத்தம் நாளுக்கு நாள், இரவுக்கு இரவு பேசினாலும், மனிதர்கள் பாவத்தில் வாழ விரும்புகிறார்கள். உங்களுக்குத் தெரியும், நாம் நினைப்பதை விட நேரம் கடந்துவிட்டது. தங்களுக்கு நிறைய நேரம் இருப்பதாக மக்கள் நினைக்கிறார்கள், ஆனால் நாம் நினைப்பதை விட நேரம் கடந்துவிட்டது என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. இயேசு சொன்னார், "நோவாவின் நாட்களிலும், லோத்துவின் நாட்களிலும் இருந்தது போல, மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் இருக்கும்."



என்று எனக்குத் தெரியாது. இங்கே பதிவு செய்யப்பட்ட இந்த பதிவுகளின் மூலம் மட்டுமே நான் தெரிந்துகொள்ள முடியும். பதிவுகள் எப்போதும் அலுவலகத்திலோ அல்லது அங்கேயோ இருக்கும். நீங்கள் அவற்றைப் பெறலாம்.

49 இப்போது, பார்வையாளர்கள் என் குரலை இன்னும் கேட்டுக்கொண்டிருந்தால். அந்தப் பெண் தன் விலாவிற்கு ஏதோ செய்கிறாள். அவளுடைய விலாவில் ஒரு பிரச்சனை இருக்கிறது. அது சரி. மேலும் இந்த நேரத்தில், அவள் வேறு ஒருவருக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறாள், அது அவளுடைய சகோதரி. அதைத்தான் நீங்கள் இப்போது உங்கள் இருதயத்தில் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் சகோதரி பாதிக்கப்பட்டுள்ளார், வியாதியாக இருக்கிறார். அவருக்கு மூட்டு வலி (arthritis) இருக்கிறது, அவருக்கு இதய நோய் இருக்கிறது, அவர் அதிகம் இருமுகிறார். அது ஆஸ்துமா.

பிறகு ஒரு ஆண் தோன்றுவதை நான் காண்கிறேன், அது ஒரு ஆண். அது உங்கள் சகோதர... இல்லை, அது உங்கள் மைத்துனர்.

இப்போது, வெளியே இருக்கும் நீங்கள், இன்றிரவு இங்கே அழைக்கப்படாதவர்கள், விசுவாசிக்கத் தொடங்குங்கள். நீங்கள் விசுவாசிக்கத் தொடங்கி, "ஆண்டவரே, எனக்கு வெளிப்படுத்தும். நான் உமது வஸ்திரத்தைத் தொட என்னை அனுமதியும், ஆண்டவரே" என்று சொல்லுங்கள். பதட்டப்பட வேண்டாம். "நான் உமது வஸ்திரத்தைத் தொட என்னை அனுமதியும், ஆண்டவரே. அவர் திரும்பி என்னிடம் பேசட்டும்" என்று சொல்லுங்கள். என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

48 நான் அந்தப் பெண்ணிடம் இன்னும் சிறிது நேரம் பேசினால், இன்னும் அதிகமாகச் சொல்லப்படும். கறுப்பின மக்களாகிய நீங்கள், நான் அந்தப் பெண்மணியிடம் இன்னும் சிறிது நேரம் பேசுவதை விரும்புகிறீர்களா? நீங்கள் விரும்பினால் உங்கள் கைகளை உயர்த்துங்கள். அவர் செய்வாரா என்று எனக்குத் தெரியாது, ஆனால் ஒருவேளை அவர் செய்யலாம். பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்வார் என்று பார்க்க, நான் உங்களிடம் இன்னும் சிறிது நேரம் பேசுவதை விரும்புகிறீர்களா? இப்போது, அவர் சொன்னது எதுவாக இருந்தாலும் அது தவறா



11 நோவாவின் நாட்களிலும், லோத்துவின் நாட்களிலும் அழிவும் நியாயத்தீர்ப்பும் வந்த நாட்களில் என்ன நடந்தது என்று பார்ப்போம். அவர்கள் இருவரும் மூன்றாவது அழிவுடன் இணைக்கப்பட்டிருந்தார்கள். இயேசு சொன்னார், "அந்த நாட்களில் இருந்தது போலவே, மனுஷகுமாரன் இரண்டாவது முறை வரும் போதும் இருக்கும்." அது அப்போது இருந்ததைப் போலவே இருக்கும்.

மேலும், நோவாவின் நாட்களிலும், அதுமட்டுமின்றி லோத்துவின் நாட்களிலும், அவை சந்திப்புக் காலங்கள் என்று நமக்குக் கற்பிக்கப்படுகிறது. பூமிக்கு நியாயத்தீர்ப்பு வருவதற்கு ஒவ்வொரு முறை முன்பாகவும், தேவன் இரக்கத்தின் அழைப்பை அனுப்புகிறார்.

ஜலப்பிரளய அழிவின் நாட்களுக்கு சற்று முன்பு தேவன் ஏனோக்கு என்ற தீர்க்கதரிசியை பூமிக்கு அனுப்பினார். அவர் ஒரு தூதரை அனுப்பினார், ஒரு செய்தியை அனுப்பினார், இயற்கைக்கு அப்பாற் பட்டதைச் செய்தார். ஆனால் மனிதன் என்ன செய்தான்? அவர்கள் புசித்தார்கள், குடித்தார்கள், நட்டார்கள், கட்டினார்கள்; அவர்கள் செய்தியின் அழைப்பை

நிராகரித்தார்கள். அந்த மனிதர்கள் ஒவ்வொரு வருடைய செய்தியும், லோத்து மற்றும் நோவா இருவருடைய செய்தியும் இதைக் கொண்டி ருந்தன: கிருபை, இரக்கம் மற்றும் விடுதலை. கிருபை, அதாவது மக்களுக்கான தேவனுடைய இரக்கம் கிருபையின் மூலம் வழங்கப்பட்டது, மேலும் மக்களுக்கு விடுதலை வழங்கப்பட்டது, ஆனால் அவர்கள் அதை நிராகரித்தார்கள். அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று நாம் காண்கிறோம்? சிரித்து, பரியாசம் பண்ணி, கேலி செய்து, பெண் கொண்டு, விபச்சாரத்தில் வாழ்ந்து, கட்டி, பயிரிட்டுக் கொண்டிருந்தார்கள்.

12 இன்றைய கட்டிடத் திட்டத்தைப் பாருங்கள். நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்: அறிவியல் உலகின் முன்னேற் றத்தைப் பாருங்கள். இப்போது, நான் இதை அவதூறு செய்வதற்காகச் சொல்லவில்லை, யார் மனதையும் புண்படுத்துவதற்காகவும் சொல்ல வில்லை; அது உண்மையென்பதாலேயே சொல் கிறேன். ஆனால் அந்த வகையான கிரியைகள் மறுபக்கத்திலிருந்து வருகின்றன. காயீனின் குமாரர்கள் இரும்பையும் உலோகங்களையும்



அது உங்கள் இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள், நீங்கள் அங்கே அனுபவித்துக்கொண்டிருப்பது ஆசீர்வாதங்கள், வல்லமை அல்ல, ஆவி.

47 ஆனால் இப்போது அவர் இங்கே இருக்கிறார். அந்தப் பெண் இப்போது தன் வாழ்க்கையை மறைக்க நினைத்தாலும் முடியாது. அது சரி.

இந்தப் பெண்மணியின் விலாவில் ஒரு பிரச்சனை இருக்கிறது, அதற்காக அவர் ஜெபிக்கப்பட விரும்புகிறார். அது 'கர்த்தர் இவ்விதமாய் சொல்லுகிறார்'. உங்களுக்கு ஒரு தோல் பிரச்சனையும் இருக்கிறது, ஒரு வியாதி, அதற்காக நான் ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அது 'கர்த்தர் இவ்விதமாய் சொல்லுகிறார்'. அது உண்மை.

அவரே நிதானிக்கட்டும். என் குரலை நீங்கள் கேட்டீர்களா? ஆனால் அது என் குரல் அல்ல. எனக்கு இந்தப் பெண்ணைத் தெரியாது. எது பேசப்பட்டதோ, அது ஏதோ ஒன்று, வேறு ஒரு நபர் என் குரலைப் பயன்படுத்துகிறார். அது பரிசுத்த ஆவியானவர் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

செய்ய முடியாது. அது எப்படி உணர்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? இங்கே உள்ள ஒவ்வொரு நபரும் என் கட்டுப்பாட்டில் இருக்கி றார்கள். அது சரி. பரிசுத்த ஆவியானவர் இங்கே இருக்கிறார், அபிஷேகம். அது என்னைக் குதிக்கவோ கத்தவோ வைப்பதில்லை; அது கர்த்தருடைய ஆசீர்வாதங்கள். பல நேரங்களில் பெந்தேகோஸ்தே மக்களாகிய நீங்கள் அதனால் ஏமாறுகிறீர்கள். எந்த மனிதனுக்கும் இல்லாத மிகப் பெரிய அபிஷேகம் இயேசுவுக்கு இருந்தது. நான் இப்போது வாசித்தது போல, அவரும் ஒரு வேதப்பகுதியை வாசித்தார். அவர், "இன்று இந்த வேதவாக்கியம் உங்கள் கண்களில் நிறைவேறிற்று" என்று சொன்னார். அவர் என்ன செய்தார்? அவர் வேதவாக்கியத்தை வாசித்தார், ஓடினார் இல்லை. அவர் அமர்ந்தார், அவருடைய வாயிலிருந்து அருமையான வார்த்தைகள் வந்தன, இதுவரை அபிஷேகிக்கப் பட்டதிலேயே மிகப் பெரிய அபிஷேகம்; ஏனென்றால் வேதம், "நியாயத்தீர்ப்பை அறிவிக்கவும், வியாதியுள்ளவர் களைக் குணமாக்கவும் நான் என் ஆவியை அவர்மேல் வைத்தேன்" என்று சொல்லியிருந்தது. அவர் அதைச் சொன்னார்.



உருக்கிச் செய்யும் பெரிய கட்டுமானர்களாகவும் பெரிய விஞ்ஞானிகளாகவும் மாறினார்கள்; அந்தப் பெரிய அறிவியல் உலகம் மிகவும் மதப்பற்றுள்ள உலகமாக இருந்தது ஆனால் காயீனிடமிருந்து வந்தது.

ஆனால் சேத்தின் வழித்தோன்றலாக வந்தவர்கள் தேவனை விசுவாசித்த ஏழை, தாழ்மையான விவசாய வகையினராக இருந்தார்கள். தீர்க்கதரிசி பிரசங்கித்தபோது, அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். இயற்கைக்கு அப்பாற்பட்டது செய்யப்பட்ட போது, அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். விடுதலை அளிக்கப் பட்டபோது, அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள்; ஆனால் மற்ற பக்கத்தார் கர்த்தராகிய தேவனுடைய நியாயத் தீர்ப்புகளில் அழிந்துபோனார்கள். தாங்கள் புத்திசாலிகள் என்பதால், தாங்கள் விரும்பும் எந்தப் பெண்ணுடனும் வாழலாம் என்று அவர்கள் நினைத்தார்கள். தாங்கள் புத்திசாலிகள் என்பதால், குடிக்கலாம், அது யாருடைய வேலையும் இல்லை என்று நினைத்தார்கள். ஆனால் தேவன் பாவத்தை வெறுக்கிறார், அவர் அதை நியாயத்தீர்ப்பு செய்யாமல் விடமாட்டார்.

அவிசுவாசியை அழித்த அதே காரியம் விசுவாசியைப் பாதுகாப்பிற்குக் கொண்டு சென்றது. நியாயத்தீர்ப்பின் தண்ணீரே அவிசுவாசியை அழித்தது, அதே தண்ணீர்தான் நோவாவைப் பாதுகாப்பிற்குச் சுமந்து சென்றது. நியாயத்தீர்ப்பு தாக்கும் முன்பே சபையை எடுத்துக்கொள்ளுதலில் (Rapture) கொண்டு செல்லும் சுவிசேஷ செய்தியே அவிசுவாசியை அழிக்கும். அவர்கள் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்படுவார்கள்.

13 இயேசு சொன்னார், "உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." இது செய்யப்படும்போது, முடிவு காலம் வரும். சுவிசேஷம் உலகத்தை எட்டியதும், "அப்போது முடிவு வரும்" என்று நம் ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகர் சொன்னார். இப்போது, நீங்கள் உலகம் முழுவதும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும்போதோ, அல்லது உலகம் முழுவதும் வேதாகமங்களை அனுப்பும் போதோ, அல்லது உலகம் முழுவதும் மிஷனரிகளை அனுப்பும்போதோ என்று அவர் சொல்லவில்லை, ஆனால் இந்த சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது என்று சொன்னார்.



45 கிணற்றடியில் இருந்த பெண்ணிடம், அவர், "சரி, பெண்ணே, நீ ஒரு புறஜாதி, நீ ஒரு சமாரியப் பெண், நீ இரட்சிக்கப்பட மாட்டாய்" என்று சொல்லியிருந்தால், சந்தேகிக்க அவளுக்கு உரிமை இருந்திருக்கும். ஆனால் அவள் இருதயத்தில் இருந்த இரகசியம் என்னவென்று அவர் அவளிடம் சொன்னார். ஆகையால், அது ஒரு ஆவிக்குரிய வல்லமையிலிருந்து வர வேண்டும் என்று அவள் அறிந்தாள். மேசியா வரும்போது, ஆபிரகாம் மற்றும் அந்த எல்லா காலங்களையும் போல, அதே காரியம் நடக்கும் என்று அவளுக்குக் கற்பிக்கப்பட்டிருந்தது. அவள் ஒரு வேசியாக இருந்தாலும், அதைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அவள் ஆவிக் குரியவளாக இருந்தாள். நிச்சயமாக. நீங்கள் யார் என்றோ உங்களைப் பற்றி எதுவும் எனக்குத் தெரியாது, ஆனால் அவர் அறிவார். அவர் எனக்கு அதை வெளிப்படுத்தினால், பார்வை யாளர்கள் நம்புவதாக உறுதியளித்திருக்கிறார்கள், நீங்களும் அப்படியே.

46 இப்போது இதை விளக்குவதற்கு எனக்கு சில சொற்களஞ்சியம் இருந்திருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். எதாலும் அதைச்

44 எனவே, அம்மா, நான் என்ன சொன்னாலும் பரவாயில்லை, நான் ஐம்பது வாழ்நாளில் சொல்லக்கூடியதை விட தேவனிடமிருந்து வரும் ஒரு வார்த்தை அதிக அர்த்தமுள்ளதாக இருக்கும். ஆனால் நீங்களே நிதானித்துப் பாருங்கள். நீங்கள் எதற்காக இங்கே இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. நீங்கள் எதற்காக இங்கே இருக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ள எனக்கு எந்த வழியும் இல்லை என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் கர்த்தராகிய இயேசு தமது குமாரன் மூலம் கிணற்றடியில் இருந்த பெண்ணுக்குச் செய்தது போல, அவர் எனக்கு வெளிப்படுத்தினால், அது தேவனிடமிருந்து வருகிறது என்று நீங்கள் நம்புவீர்களா? இப்போது, நான், "நீங்கள் வியாதியாய் இருக்கிறீர்களா?" என்று கேட்டால், நீங்கள், "ஆம், ஐயா, நான் வியாதியாய் இருக்கிறேன்" என்று சொல்வீர்கள். நான், "சரி, கர்த்தர் உங்களைக் குணமாக்கப் போகிறார்" என்று சொன்னால், அதைச் சந்தேகிக்க உங்களுக்கு உரிமை உண்டு. அவர்...



அப்படியானால் சுவிசேஷம் என்பது என்ன? பவுல் சொன்னார், "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடு மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியின் நிரூபணத் தோடும் வந்தது," வார்த்தையை வெளிப் படுத்தும் பரிசுத்த ஆவியானவர். ஏனென்றால், நீங்கள் அடுத்த வசனத்தைப் பார்த்தால், அவர், "உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று சொன்ன போது, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" என்று சொன்னார்.

"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்," நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக தம்மை வெளிப்படுத்தும் படிக்கு.

14 பெரும்பாலும், நாம் இந்தச் செய்தியைக் கொண்டு வர முயற்சிக்கும்போது, நம் வார்த்தைகள் உலகத்திற்கு லோத்துவின் வார்த்தைகள் அவன் உறவினர்களுக்கு இருந்தது போலவே தோன்றுகிறது. நாம் அவர்களைக் கேலி செய்வது போலவோ, அல்லது அவை வீண் வார்த்தைகள் போலவோ அவர்களுக்குத் தோன்றுகிறது. அவர்களின் போதகர்கள் இந்த

விடுதலையின் செய்தியைப் புறக்கணித்திருக்கிறார்கள், அல்லது வரவிருக்கும் மற்றொரு தலை முறைக்கு அதை விளக்க முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், வார்த்தையை உறுதிப்படுத்தவும், பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்தவும் கர்த்தருடைய தூதர் பிரசன்னமாயிருக்கிறார், மேலும் இந்த அடையாளங்கள் தொடர்கின்றன.

அவர்கள் கேலி செய்ய முயன்றார்கள், லோத்துவிடம் சொன்னார்கள்... ஏன், அவர்கள் லோத்துவை, அவன் சொந்த உறவினர்களே கேலி செய்தார்கள். லோத்து ஒரு நீதிமான். அவர்களுடைய அக்கிரமச் செய்கைகளைக்கண்டு, நீதியுள்ள தன் ஆத்துமாவில் நாள்தோறும் வாதிக்கப்பட்டான் என்று வேதாகமம் சொல்லுகிறது.

இந்தத் தேசம் மனித உடலைத் தவறாகப் பயன்படுத்துதலால் நிறைந்திருக்கிறது. அது கட்டுக்கடங்காமல் போகும்போது, குடிகாரர்கள், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள், பதின்ம வயதினர், சிறார் குற்றவாளிகள், அப்போதிருந்தது போலவே



என்ன என்று யாருக்காவது தெரிந்தால், குறிசொல்லுதல் என்பது பிசாசின் பொய் என்றும், பாதி நேரம் கூட சரியாக இருப்பதில்லை என்றும் அவர்களுக்குத் தெரியும். குறிசொல்லுகிறவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து மக்களை இரட்சிக்க வைப்பதில்லை. யாராவது அப்படிச் செய்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இல்லை. நீங்கள் ஒருபோதும் கேட்க மாட்டீர்கள். அவர்கள் மாறுபாடான ஆவியைக் கொண்ட பிசாசு பிடித்த மனிதர்கள். அது முற்றிலும் சரி. கர்த்தருடைய தூதர் நீதியையும், மனந்திரும்புதலையும், கர்த்தருடைய வருகையையும் பிரசங்கிக்கிறார், மேலும் அடையாளங்களைக் காண்பிக்கிறார். நிச்சயமாக, பிசாசு ஒரு குறிசொல்லுபவனையோ அல்லது ஒரு மந்திரவாதியையோ போலியாக நடிக்க வைக்கிறான், ஆனால் ஒரு போலி, ஒரு உண்மையானது இருக்கிறது என்பதை மட்டுமே அறிவிக்கிறது. ஒரு கள்ள நோட்டு, ஒரு உண்மையான நோட்டு இருக்கிறது என்பதை மட்டுமே அறிவிக்கிறது.

எனக்குத் தெரிந்தவரை, இப்போது வரை என் வாழ்நாளில் நான் இந்தப் பெண்ணைப் பார்த்ததில்லை. அதோ இருக்கிறது. இப்போது அது என்ன? அது...? நீங்கள் சொல்கிறீர்கள்... சரி, அது நடந்தால், அது இயற்கைக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்; அது நம் அனைவருக்கும் தெரியும். அப்படித்தான் தேவன் எப்போதும் முடிவு காலத்திற்கு முன் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தம்மை வெளிப்படுத்துகிறார். பாபிலோனிய ராஜ்யம் அழிக்கப் படுவதற்கு முன்பு, நோவா பேழைக்குள் செல்வதற்கு முன்பு, மோசே இஸ்ரவேல் புத்திரரை வெளியே கொண்டு வருவதற்கு முன்பு, சோதோம் மற்றும் கொமோரா அழிக்கப்படுவதற்கு முன்பு, எப்போதும், எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்பு, எப்போதும், அது இயற்கைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கிறது, மேலும் இந்த நாளிலும் அதைச் செய்வதாக வாக்களித்தார்.

43 இப்போது, அந்த நாளில் அவர்கள் சொன்னது போல நீங்கள் சொல்லலாம், "ஓ, இது பெயல்செபூல், ஒரு குறிசொல்லுகிறவன். இது..." ஆனால் குறிசொல்லுதல் என்றால்



இருக்கிறார்கள். மனிதர்கள் அதைப் பரியாசம் பண்ணுகிறார்கள். கர்த்தராகிய தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையா ளங்களை அவர்கள் காணும்போது, நாம் மதத்தைக் கேலி செய்வதாகச் சொல்ல முயல்கிறார்கள்.

15 நீண்ட காலத்திற்கு முன்பு அல்ல, யாரோ ஒருவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார், இறையியலில் ஒரு பெரிய டாக்டர். அவர் சொன்னார், "திரு. பிரான்ஹாம், உங்களைச் சரிசெய்து கொள்ளுங்கள். நீங்கள் கர்த்தராகிய இயேசுவைப் போல நடிக்க முயற்சிக்கிறீர்கள்." "நீங்கள் ஒரு கேலிக்கூத்தை மட்டுமே உருவாக் குகிறீர்கள்" என்று சொன்னார். மனிதனால் அதைச் செய்ய முடியாது என்பது இந்த ஏழை, தளர்ந்த மனிதனுக்குத் தெரியும் என்று அவருக்குத் தெரியவில்லை. இது முடிவு காலத்தின் அடையாளம், அதை அவர் (தேவன்) நிறைவேற்றுகிறார்.

ஆனால் அவர்கள் லோத்துவைப் பரியாசம் பண்ணினார்கள். "ஓ, அவனுக்குச் செவி கொடுக்காதீர்கள். அந்த ஆள் பைத்தியம். இந்தப் பெரிய இடம் எப்படி அழிக்கப்பட முடியும்?" என்று சொன்னார்கள். சோதோம் மற்றும்

கொமோரா, அறியப்பட்ட பூமியின் மிகப்பெரிய நகரம், அக்கினியாலும் கந்தகத்தாலும் எப்படி அழிக்கப்பட முடியும்? இன்று அவர்கள் சொல்கிறார்கள், "உலகம் எப்படி எரிக்கப்பட முடியும்? உலகம் எப்படி அழிக்கப்பட முடியும்?" எனது மிகவும் அன்பான சகோதரனே, அதை உண்டாகும்படி பேசின அதே தேவனுடைய வார்த்தை சொல்கிறது, அது எப்படி வார்த்தையினால் உண்டானதோ அதே வழியில் கர்த்தருடைய வார்த்தையினால் இல்லாமல் போகும். ஆமென். அது உண்மை. இந்த ஏழை, பரிதாபகரமான, குருடான, நிர்பாக்கியமான, நிர்வாணமான தேசத்திற்குத் தேவன் இரக்கமாயிருப்பாராக. "நீ: நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லிக் கொண்டு, நீ நிர்பாக்கியனும், பரிதபிக்கப் படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமலிருக்கிறாய்" என்று வேதாகமம் சொல்லவில்லையா? எப்பேர்ப்பட்ட பரிதாபகரமான நிலை.



ஒரு தீர்க்கதரிசி என்று நான் காண்கிறேன், ஆனால் மேசியா வரும்போது அது அவருடைய அடையாளம் என்று நாங்கள் அறிவோம்" என்று சொல்லி, அவர், "நானே அவர்" என்று சொன்னார் என்றால்; நேற்று சமாரியருக்கு அவர் அறியப்பட்ட அதே வழியில், இன்றும் மாறாதவராக இருக்க அவர் கறுப்பின இனத்திற்குத் தம்மை வெளிப்படுத்த வேண்டும். அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். அவர் செய்வாரானால்... இங்கே என் கைகள் உயர்ந்துள்ளன, என் வாழ்நாளில் நான் இந்தப் பெண்ணைப் பார்த்ததில்லை. கையை உயர்த்தியிருக்கும் அவளை... எனக்கு அவளைத் தெரியாது, அவளைப் பற்றி ஒன்றுமே தெரியாது, அவளைப் பார்த்ததில்லை, எதுவுமே இல்லை.

42 அப்படியானால், பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை அதே வல்லமையில் வெளிப்படுத்தினால், எத்தனை பேர் அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பீர்கள்? மக்கள் அனைவரும் அதைச் செய்ய வேண்டும். மக்களாக, நித்தியத்திற்குச் செல்லும் மக்களாக, நமக்கு இடையே வேதாகமம் இருக்கிறது,

வரலாற்றை வாசியுங்கள், அது உண்மையல்லவா என்று பாருங்கள்.

வணக்கம்? ஜெபிக்கப்பட வேண்டிய நபர் இவரா? இங்கே ஒரு பெண்மணி நிற்கிறார், ஒரு கறுப்பினப் பெண்மணி. எனக்குத் தெரிந்தவரை, இந்தப் பெண்மணியை நான் என் வாழ்நாளில் பார்த்ததில்லை, எனக்கு இவரைத் தெரியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்களா? நாம் அந்நியர்களா, அம்மா? அப்படியானால், நாம் அந்நியர்கள் என்று மக்கள் பார்க்கும் வகையில் உங்கள் கையை உயர்த்துங்கள்.

41 இப்போது, இது ஒரு அழகான காட்சி, யோவான் 4 ஆம் அதிகாரத்தில் நடந்ததின் ஒரு சித்திரம்: ஒரு பெண், ஒரு ஆண், இரண்டு வெவ்வேறு இனங்கள்: அப்போது ஒரு சமாரியப் பெண் மற்றும் ஒரு யூதர், இங்கே ஒரு வெள்ளை இன மனிதர் மற்றும் ஒரு கறுப்பினப் பெண்மணி: வேதாகமக் காட்சியில் ஒரு சமாரியப் பெண் மற்றும் ஒரு யூதர். ஆனால் இயேசு சமாரிய இனத்திற்குத் தம்மை வெளிப்படுத்திய விதத்தில், அந்தப் பெண்ணின் இருதயத்தில் உள்ளதைச் சொல்லி, அவள், "நீர்



16 என் மனதில் தோன்றும் ஒன்றை நீங்கள் ஒரு கணம் கவனிக்கும்படி நான் விரும்பு கிறேன். சோதோம் மற்றும் கொமோராவின் அழிவுக்கு முன்னதாக, ஆபிரகாம் என்ற பெயருள்ள ஒரு தீர்க்கதரிசியை மலையின் மேல் தேவன் வைத்திருந்ததைக் காண்கிறோம். அவர் அவருக்கு ஒரு வாக்குறுதியை அளித்திருந்தார், மேலும் பாவத்தில் வாழ்வதை விட, கடினமான வழியைத் தேர்ந்தெடுத்து உண்மையான வார்த்தையைப் பிரசங்கிக்க அவர் தயாராக இருந்தார்.

இந்தப் பெரிய அழிவு நடப்பதற்கு சற்று முன்புதான் கர்த்தருடைய தூதர் அவரைச் சந்தித்தார். நீங்கள் இப்போது கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நோவாவின் காலத்தில் அது தண்ணீர். சோதோம் மற்றும் கொமோராவில், அது அக்கினி. இந்த முறை அது அக்கினியாக இருக்கும் என்று தேவனுடைய மகா பரிசுத்த வார்த்தையால் நமக்குக் கற்பிக்கப்படுகிறது.

வேதவாக்கியம் சொல்வதைக் கவனி யுங்கள். சாராள், சுமார் நூறு வயது, ஆபிரகாம், தொண்ணூற்று ஒன்பது வயது, சாராள் எண்பத்து

ஒன்பது வயதாக இருந்திருப்பாள். பெண்களுக்குரிய வழிபாடு அவளுக்கு நின்றுபோய் அநேக வருடங்களாகி விட்டன. ஆனாலும், ஆபிரகாம் பற்றிக்கொண்டிருந்தார், ஏனென்றால் தேவன் தம் வாக்குறுதியைக் காத்துக்கொள்ள வல்லவர் என்று அவர் அறிந்திருந்தார். அவர் உண்மையுள்ளவர். தேவன் தன்னிடம் பேசிய வார்த்தையை, அந்த வார்த்தையை அவர் பற்றிக்கொண்டிருந்தார். மனிதனால் உருவாக்கப்பட்ட இறையியலால் அல்ல, வார்த்தையினால், 'கர்த்தர் இவ்விதமாய் சொல்லுகிறார்' என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கும் போதுதான் தூதர்கள் மக்களுக்குத் தோன்றுகிறார்கள். அப்போதுதான் தூதர்கள் தோன்று கிறார்கள்.

17 ஆபிரகாம் வார்த்தையைச் சார்ந்தி ருந்தார். ஒரு நாள் அவர் கர்வாலி மரத்தின் அடியில் அமர்ந்திருந்தபோது, மூன்று புருஷர்கள் வருவதைக் கண்டார். அவர் ஆவிக்குரியவர், ஏனென்றால் தேவன் இன்னும் தேவனாகவே இருக்கிறார் என்று அவர் அறிந்திருந்தார். இந்த புருஷர்கள் தோன்ற ஆரம்பித்தபோது, ஆபிரகாம் அவர்களைச் சந்திக்க ஓடி, "ஆண்டவரே, ஒரு



படுகிறார். "உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே, உங்களுக்குள்ளே இருப்பேன்." சரி. நான் எங்கே...? இருபத்தைந்து, என்ன...? ஜெப கார்டு இருபத்தைந்து வைத்திருப்பவர் யார்? உங்கள் கையை உயர்த்துங்கள். [ஒலி நாடாவில் காலியிடம்]

40 இங்கே தேவனுடைய வார்த்தை சத்தியத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும், அல்லது அது பிழையில் இருப்பதாகக் காணப்படும், ஏனென்றால் இயேசு கிறிஸ்து வாக்குறுதி அளித்தார். நீங்கள் அதை அறிந்திருக்கிறீர்கள். நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம் என்பது எவ்வளவு உண்மையோ, கிறிஸ்து இங்கே தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதும் அவ்வளவு உண்மை, "ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்துகிறார்." அழிவின் தூதரை அனுப்புவதற்கு முன்பு அவர் எப்போதும் இரக்கத்தின் தூதரை அனுப்புவதால், நியாயத்தீர்ப்பு வெளிப்படுத்தப்படுவதற்கு முன்பு, அவர் தமது பிரசன்னத்தைக் காட்டி, தம்மை வெளிப்படுத்தி, தமது சபையைக் கொண்டுவருகிறார். வேதாகமத்தை வாசியுங்கள்,

மாறாதவர், செயலில் மாறாதவர். ஒரே விஷயம், ஒரு சரீர உடல் இல்லை. எனவே அவர் என்ன சொன்னார்? "நானே திராட்சச்செடி; நீங்கள் கொடிகள்." திராட்சச்செடி கனி கொடுப் பதில்லை. அது கொடியைச் சுத்தம் பண்ணுகிறது, அது கனி கொடுக்கிறது. சரி.

39 ஒரு வார்த்தை எனக்குத் தோன்றிக்கொண்டே இருக்கிறது; நான் விளக்கலாம். யாரோ ஒருவர் இங்கே இப்போது தூதரைப் பற்றி, 'அது யார்' என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். நான் இந்தத் தூதரை, "கர்த்தர்" என்று அழைத்தேன். ஆபிரகாம்... இதை யார் சந்தேகிக்கிறாரோ, அல்லது நினைத்துக் கொண்டிருக்கிறாரோ, அவர் ஒரு பண்டிதர். ஆபிரகாம் தன்னிடம் பேசிய அந்தத் தூதரின் நாமத்தை, "ஆண்டவர்" (Lord) என்று அழைத்தார், அதாவது எலோஹிம், சர்வவல்லமையுள்ள பெரிய யேகோவா. அவர் ஒரு மனித உடலில் வெளிப்பட்டார். அவர் தமது சொந்த குமாரனாகிய இயேசுவின் சரீரத்தில் வெளிப்பட்டார். இன்றிரவு தம்மை அவரிடம் ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு விசுவாசியின் சரீரத்திலும் அவர் வெளிப்



கணம் நில்லுங்கள், உங்கள் கால்களைக் கழுவ கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறேன்; நாங்கள் கொஞ்சம் அப்பம் செய்கிறோம். நீங்கள் உங்களை ஆசுவாசப் படுத்திக்கொள்ளுங்கள், பிறகு நீங்கள் போகலாம். இதற்காகவே நீங்கள் வந்தீர்கள்" என்றார். "இதற்காகவே நீங்கள் வந்தீர்கள்" என்ற அந்த வார்த்தைகளுக்குள் செல்ல எனக்கு நேரம் இருந்திருக்க விரும்புகிறேன்.

சிறிய உணவு ஆயத்தமானபோது, ஆபிரகாம் நின்று, இந்தப் புருஷர்கள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார், தூதர் கூடாரத்திற்கு முதுகைக் காட்டி அமர்ந்திருந்தார். வேதாகமம் அவர் கூடாரத்திற்கு முதுகைக் காட்டி இருந்ததாகவும், சாராள் கூடாரத்தின் உள்ளே இருந்ததாகவும் கூறுகிறது.

18 அழிவுக்கு முன் கடைசி செய்தியைக் கொண்டுவரும் இந்தத் தூதரின் சுபாவத்தைக் கவனியுங்கள். அவர், "ஆபிரகாம், நான் உனக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்றப் போகிறேன்" என்றார். நான் அதை நேசிக்கிறேன். அதுதான் நம் பிதாவாகிய தேவன். "நான் உனக்குக் கொடுத்த வாக்

குறுதியை நிறைவேற்றுவேன். ஜீவ காலத்தின் படி, அடுத்த இருபத்தெட்டு நாட்களில், நான் உன்னைச் சந்திப்பேன். இந்த இருபத்தைந்து வருடங்களாக நீ காத்திருந்த அந்தக் குழந்தை, உனக்குக் கிடைக்கும்."

பாவப்பட்ட சிறிய சாராள், விசுவாசத்தில் கொஞ்சம் பலவீனமாக இருந்தாள், ஆனால் அந்த நாட்களில், ஆணின் விருத்தசேதனம் பெண்ணையும் உள்ளடக்கிக்கொண்டது, ஏனென் றால் விருத்தசேதனம் மட்டுமே தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்பட முடியும். பெண் விருத்தசேதனம் செய்யப்பட முடியாது, எனவே, கணவன் அவளுக்குப் பிராயச்சித்தமாக இருந்தான், ஏனென்றால் அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆபிரகாமின் விசுவாசம் அந்த நேரத்தில் சாராளைத் தாங்கியது.

19 தூதருக்குப் பின்னால் கூடாரத்தில் இருந்த சாராள், "சாராளுக்குக் குழந்தை பிறக்கும்" என்று தூதர் சொன்னபோது, சாராள் சத்தமாக அல்ல, தன் இருதயத்திற்குள் சிரித்தாள். கூடாரத்திற்கு முதுகைக் காட்டி யிருந்த தூதர், ஆபிரகாமின் முகத்தைப் பார்த்து, "சாராள் ஏன் சிரித்தாள்?" என்று கேட்டார். அது



கிறேன். எனது நினைவின்படி அது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். இன்றிரவு இருபத்தைந்திலிருந்து அழைப்போம். அது மற்றொரு புதிய எண். எப்படி...? நாங்கள் ஏன் ஜெப கார்டுகளைக் கொடுக்கிறோம் என்று நீங்கள் யோசிக்கலாம், நீங்கள் ஒரு அந்நியராக இருந்தால் நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன். இங்கு எத்தனை பேர் வியாதியுடனிருந்து கர்த்தர் உங்களைக் குணமாக்க விரும்புகிறீர்கள், உங்கள் கைகளை உயர்த்துங்கள், கட்டிடத்தில் யாராவது? யார் முதலில் வருவார்கள்? பாருங்கள், நமக்குள் பரிசுத்த ஆவியானவர் அசைவாடுவதைப் பெற நாம் ஜெப கார்டுகளைக் கொடுக்க வேண்டும். பிறகு அவர் கூட்டம் முழுவதும் சென்று வியாதியுள்ள வர்களைக் குணமாக்குகிறார்.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்பதில் எத்தனை பேர் முழுமையாக இணங்கியிருக்கிறீர்கள்? அவர் அதேபோல் தம்மை வெளிப்படுத்துவார் என்று வாக்குறுதி அளித்தார் என்பதில் முழுமையாக இணங்கியிருக்கிறீர்களா? அவர் கொள்கையில் மாறாதவர், வல்லமையில் மாறாதவர், ஆவியில்

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஆமென்.

33 ஜெபிக்கப்படுவதற்காகச் சிலரை நாங்கள் அழைக்கப் போகிறோம்; அதாவது, பில்லி கார்டுகளைக் கொடுத்திருந்தால். அவர் இன்றிரவு கார்டுகளைக் கொடுத்தாரா? சரி. என்ன எழுத்து? 'B'. சரி. நேற்றிரவு எங்கிருந்து அழைத்தோம்? அது இல்லையா...? ஓ, அது சரி, நேற்றிரவு எங்களிடம் ஜெப கார்டுகள் எதுவும் இல்லை. நாங்கள் கூட்டத்திலிருந்து அப்படியே அழைத்தோம். பரிசுத்த ஆவியானவர் அனுமதித்தால் இன்றிரவும் அதைச் செய்யலாம், அல்லது நான் ஒரு ஜெப வரிசையை அழைக்கலாம். நான் அதிகமான ஜெப கார்டுகளைக் கொடுக்க விரும்பவில்லை, ஏனென்றால் சகோதரர் ஆஸ்போர்னும் நானும் எப்படியும் அனைவரையும் வரிசை வழியாகக் கொண்டு வர வேண்டியிருக்கும்.

38 எனவே இன்றிரவு 'B' என்ற கார்டுகளில் எங்கிருந்தாவது அழைப்போம். ஐம்பதிலிருந்தும், ஒன்றிலிருந்தும், எண்பத்தைந்திலிருந்தும் அழைத்தோம் என்று நினைக்



என்ன வகையான தொலைலுணர்வு (telepathy)? கூடாரத்தில், தமக்கு பின்னால் இருக்கும் அவளுடைய எண்ணத்தை நிதானிக்கிறார். வேதாகமம் அதை எவ்வளவு தெளிவாக விளக்குகிறது என்று பார்க்கவில்லையா? அது அழிவுக்கு முந்தைய கடைசி எச்சரிக்கை செய்தி.

உங்கள் கண்களைத் திறங்கள். அவருக்குப் பின்னால் கூடாரத்தில், சத்தமாக அல்ல, ஆனால் அவள் இருதயத்தில் சிரித்தாள், அவள் செய்ததை கர்த்தருடைய தூதர் நிதானித்தார். "அவள் ஏன் சிரித்தாள்?"

அவள் அழைக்கப்பட்டாள். அவள் நடுங்கிக் கொண்டிருந்தாள். "நான் சிரிக்கவில்லை" என்றாள். அவர், "இல்லை, நீ சிரித்தாய்" என்றார். பரலோகத்திலிருந்து அக்கினி இறங்கு வதற்கு முன் கடைசி செய்தியைக் கொண்டுவந்த தூதர் அவர்தான். இயேசு சொன்னார், "சோதோம் மற்றும் கொமோராவின் நாட்களில் எப்படி இருந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் பரலோகத்திலிருந்து வெளிப்படும் நாட்களிலும் இருக்கும்." அந்தச் செய்தியைப் பார்க்கிறீர்களா? "மனுஷகுமாரன் பரலோகத்திலிருந்து வெளிப்படும்போது..."

20 இப்போது, இந்தத் தூதர் சோதோமுக்குச் சென்று ஒரு மனிதன் மூலம் தமது செய்தியைப் பேசத் தொடங்கியபோது, அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணிச் சிரித்தார்கள். அவர்கள் செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றும் அவர்கள் அதைச் செய்வதில்லை. இது அதே விஷயம்தான், அவர்கள் அதை நம்ப மாட்டார்கள். ஒன்று மட்டுமே எஞ்சியிருக்கிறது, அது நியாயத்தீர்ப்பு.

ஆனால் கவனியுங்கள், அவர்கள் அப்படி இருப்பார்கள் என்று வேதாகமம் கூறியது. 2 தீமோத்தேயு 3-ல், வேதாகமம் அவர்கள் இருப்பார்கள் என்று கூறியது. "கடைசி நாட்களில் ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறார்." அது நேரடியாக, அந்த நாளுக்கு அல்ல, கடைசி நாளுக்குச் சொல்லப் படுகிறது. "மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும்... (தொலைக் காட்சி, உலகத்து காரியங்களை விரும்புபவர்கள். அது அதனுடன் செல்கிறது) ...தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரிய ராயும், இணங்காதவர்களாயும், அவதூறு பண்ணு கிறவர்களாயும், நல்லோரைப் பகைக் கிறவர்களாயும் இருப்பார்கள்."



சந்ததியினர் எந்த சாக்குப்போக்கும் இல்லாமல் இருப்பார்கள்.

37 இப்போது அருளும், ஆண்டவரே, இந்தப் புறஜாதியினரின் காலத்தின் முடிவில், அவர் வந்து, நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக, பரலோகத்திலிருந்து தேவ குமாரனாகத் தம்மை வெளிப்படுத்தி ஆறுதல் படுத்துவாராக. கடந்த சில வருடங்களில் நீர் எங்களுக்கு இருந்தது போல, உமது மகிமைக்காக இந்தக் காரியங்கள் செய்யப்பட அனுமதித்தீர், சுவிசேஷத்திற்காக இன்றிரவு அது மீண்டும் செய்யப்படட்டும், "நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள், இதைவிடப் பெரிய கிரியைகளையும் செய்வீர்கள், ஏனென்றால் நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன். இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது; நீங்களோ என்னைக் காண்பீர்கள். நான் உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களுடனே, உங்களுக்குள்ளே இருப்பேன்" என்று சொன்ன நம்முடைய கர்த்தரின் வார்த்தைகள் வெளிப்படும்படியாக. உமக்கு நன்றி, ஆண்டவரே. உமது அன்பு குமாரனாகிய

ஆக்கினைக்குட்படுத்தும். நான் என் வார்த்தைகளைப் பேசவில்லை, உமது வார்த்தைகளைப் பேசினேன். ஆகையால், ஆண்டவரே, விசுவாசத்தினால் ஒரு நாள் நீர் சமாதானத்தோடு என்னை அழைத்துச் செல்ல வருவீர் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

எனது சகோதரர்களையும் எனது சகோதரிகளையும், இந்த மனித இனத்தின் ஆதாமின் சந்ததியார் அனைவரையும் நான் நேசிக்கிறேன். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு, நீர் சொன்னது போலவே நிராகரிக்கப்பட்ட இந்த முடிவு காலத்தை நான் பார்க்கிறேன். இப்போது, இந்தக் கடைசி நேரத்தில், அதே காரியங்களைச் செய்ய நீர் அதே தூதரை அனுப்பியுள்ளீர். மனிதர்கள் தங்கள் சொந்த இறையியலில் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் அதைப் பார்த்து சிரிக்கிறார்கள், பரியாசம் பண்ணுகிறார்கள். ஆண்டவரே, மற்ற நாட்களில் அவர்கள் செய்த அதே காரியம் அதுதான். இன்றிரவு இந்தச் சிறிய கூட்டம் அதைக் காணத் தவறாமல் இருக்கட்டும். விஞ்ஞான பூர்வமான நிரூபணமாக அவருடைய புகைப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது, அந்த நாளில் காயீனின்



நீங்கள் சொல்கிறீர்கள், "அது நாத்திகர்கள், சகோதரர் பிரான்ஹாம். அது கம்யூனிஸ்டுகளாக இருக்க வேண்டும்." அது அமெரிக்க, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள்தான்: "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் வல்லமையை (சுவிசேஷத்தின் இயற்கைக்கு அப்பாற்பட்டதை) மறுதலிக்கிறவர்களாய் இருப்பார்கள், இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு. பாவங்களால் நிறைந்து, பலவித இச்சைகளால் இழுக்கப்பட்டு, வீடுகள்தோறும் நுழைந்து, ஏமாறுகிற ஸ்திரீகளை வசப்படுத்திக் கொள்ளுகிறவர்கள் இந்தக் கூட்டத்தாரே." "என் சபை இதைச் செய்கிறது, எங்களுக்கு இவ்வளவு நேரம் இருக்கிறது," ஆனால் பரிசுத்த ஆவியையும், தேவனுடைய சித்தத்தையும் தேடுவதற்கு நேரமில்லை. அவர்கள் அதை மறுக்கிறார்கள். நேரம் இல்லை!

21 ஆனால் நீங்கள் லோத்துவையும் நோவாவையும் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மழை பெய்வதற்கு முன்னதாகவே, வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் மேகங்களிலிருந்து ஒரு துளி ஈரம் வருவதற்கு

முன்னதாகவே... நாம் நேற்றிரவு வாசித்தது போல, சுவரில் உள்ள கையெழுத்தை சுவிசேஷத்தின் மூலம் நாம் உண்மையாகவே பார்க்கிறோம் என்று நான் நம்புகிறேன். புத்திசுவாதீனமுள்ள எவரும், நமக்குச் சில மணிநேரங்களே எஞ்சியுள்ளன என்பதையும், ஒருவேளை இதுவே கடைசி மணிநேரம் என்பதையும் பார்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். ஆனால் நியாயத்தீர்ப்பின் ஒரு சொட்டுத் தண்ணீர் விழுவதற்கு முன்பே, நோவா பேழைக்குள் சென்றார்.

"பூலோகம் முழுவதையும் நியாயந் தீர்க்கிறவர் நீதி செய்யாரோ? நீதிமானை துன்மார்க்கனோடே அழிப்பீரோ?" என்று ஆபிரகாம் தூதரிடம் கேட்கவில்லையா? நிச்சயமாக இல்லை, பூலோகம் முழுவதையும் நியாயந்தீர்க்கிறவர் நீதியையே செய்வார். வானத்திலிருந்து ஒரு பொறி நெருப்பு வருவதற்கு முன்பே, லோத்து சோதோமிலிருந்து வெளியே எடுக்கப்பட்டார் என்பதைக் கவனியுங்கள். இயேசு சொன்னார், "நோவாவின் நாட்களிலும், லோத்துவின் நாட்களிலும் இருந்தது போல, தேவகுமாரன் வரும்போதும்



சீக்கிரமாக நகரத்திற்குள் ஓடி, "நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்ன ஒரு மனிதனை வந்து பாருங்கள். இவர் மேசியாதானே?" என்றாள்.

ஆபிரகாமுக்குத் தம்மை வெளிப் படுத்தியவரில் இருந்த அதே தேவன், அதே தூதர், அதே ஆவி, அதே வழியில், அதே முறையில், அதே செய்தியுடன் இருக்கிறார். மனுஷகுமாரன் வரும்போதும் அப்படித்தான் இருக்கும் என்று இயேசுவே சொன்னார். அது அதே வழியில் வெளிப்படுத்தப்படும்.

36 வேறு என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. கர்த்தர் தமது பிள்ளைகளுக்கு இரக்கத்தில் தம்மை வெளிப்படுத்துவாராக என்பது என் ஜெபம்.

கர்த்தராகிய யேகோவா, இப்போது, ஆண்டவரே, நான் இந்த மக்களிடம் என் முழு இருதயத்தோடும் பேசினேன். ஏனென்றால் நீர் வரும் அந்த நேரத்தில் என் வார்த்தைகளுக்கு நான் கணக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் உணர்கிறேன். என் வார்த்தைகள் என்னை மேலே கொண்டு செல்லும், அல்லது என்னை

இயேசு அவரிடம் கூறினார். அது அவரை ஒரு விசுவாசியாக மாற்றியது. அவர் தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். அது சரியா? கி.பி. 96 இல் டைட்டஸால் எருசலேம் முற்றுகையிடப்பட்டபோது அழிவு பின் தொடர்ந்தது. யூதர்கள் என்ன சொன்னார்கள்? "அவன் ஒரு அசுத்த ஆவி." அவர் என்ன சொன்னார்? "நான் என் நாளில், நான் இப்போது என்னை வெளிப்படுத்தும்போது, அதற்காக நான் உங்களை மன்னிப்பேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அப்படி வெளிப்படுத்தும் நாளில், அதற்கு விரோதமான ஒரு வார்த்தை கூட இந்த உலகத்திலாவது வரும் உலகத்திலாவது மன்னிக்கப்பட மாட்டாது."

35 அவர் சமாரியர்களுக்கு தம்மை வெளிப்படுத்தியபோது. அவர் அதை எப்படி வெளிப்படுத்தினார்? கிணற்றடியில் இருந்த பெண்ணிடம், அவளுக்கு என்ன பிரச்சினை என்று சொன்னார். அவள், "நீர் ஒரு தீர்க்கதரிசி என்று நான் காண்கிறேன், ஐயா. மேசியா வரும்போது, அவர் அந்தக் காரியங்களைச் செய்வார் என்று நாங்கள் அறிவோம்" என்றாள். அவர், "பேசுகிற நானே அவர்" என்றார். அவள்



இருக்கும்." கையெழுத்து சுவரில் இருந்தால், நியாயத்தீர்ப்பின் காலம் நெருங்கி விட்ட தென்றால், சபையின் எடுத்துக் கொள்ளப்படுதல் (Rapture) எவ்வளவு நெருக்கமாக இருக்கிறது? இன்றிரவு அது எவ்வளவு நெருக்கமாக இருக்கிறது? அதைச் சிந்தித்துப் பாருங்கள்.

22 நோவா பாதுகாப்பிற்காகப் பேழைக்குள் சென்றார். லோத்து சோதோ மிலிருந்து வெளியே வந்தார். ஒன்று வெளியே வந்தது, மற்றொன்று உள்ளே சென்றது. இரண்டும் ஒன்றாகச் சேரும்போது அது எதைக் குறிக்கிறது? இது சபை பாதுகாப்பிற்காக உலகத்திலிருந்து வெளியே வருவதையும், மகிமைக்குச் செல்ல கிறிஸ்துவின் பேழைக்குள் செல்வதையும் குறிக்கிறது. ஒருவர் வெளியே வந்தார், மற்றவர் உள்ளே சென்றார். ஒருவர் உலகத்துடன் சேர்ந்து அழிக்கப்படாமல் இருக்க வெளியே வந்தார், மற்றவர் பாதுகாப்பான பேழைக்குள் சென்றார். கிறிஸ்துவே பாதுகாப்பின் பேழையாக இருக்கிறார்.

நினைவில் கொள்ளுங்கள். கல்மழை, அக்கினி மற்றும் இருளின் நியாயத்தீர்ப்புகள் எகிப்தின் மேல் வீசுவதற்கு முன், இஸ்ரவேல்

வெளிச்சம் இருந்த கோசேனுக்குத் தன் வழியை அமைத்தது. எகிப்து இருளில் அலைய விடப்பட்டது.

ஆண்களே, பெண்களே, இப்போது நான் சொல்வதைக் கேளுங்கள். பாவத்தின் கறையுள்ள இந்தத் துயரமான பூமியில் நீங்கள் விடப்படுவதற்கு முன், உங்களால் முடிந்தவரை வேகமாக ஓடி வெளிச்சத்திற்குச் செல்லுங்கள்... [ஒலி நாடாவில் காலியிடம்], வெளிச்சமாகிய கிறிஸ்து இயேசுவிடம், அவருடைய இரக்கத்தின் செய்தியை ஏற்றுக்கொள்ளுங்கள். தூதர், "சீக்கிரமாய் அங்கே ஓடிப்போ; நீ அங்கே போகுமளவும் நான் ஒன்றும் செய்யக்கூடாது" என்று சொன்னார், நியாயத்தீர்ப்புகள் வரமுடியாது.

23 நம் எல்லோரையும் முழங்காலிட வைக்கும் ஏவுகணை ரஷ்யாவிடம் உள்ளது. நாம் அவர்களுக்கு ஐந்து வருடங்கள் பின்னால் இருக்கிறோம் என்று நம் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். அவர்கள் இப்போது இருக்கும் இடத்தைப் பிடிக்க நமக்கு ஐந்து வருடங்கள் ஆகும். நமது சிறிய ஸ்புட்னிக் (Sputnik)



அவர் தம்மை எப்படி வெளிப்படுத்துகிறார்? இரக்கத்தில், உங்கள் ஆத்துமாவை இரட்சித்து, தமது ஜீவனை உங்களுக்குக் கொடுத்து, துக்கத்திற்குப் பதிலாக மகிழ்ச்சியை, பயத்திற்குப் பதிலாக விசுவாசத்தை, வியாதிக்குப் பதிலாக சுகத்தைக் கொடுத்து, அவர் முன்பு செய்த அதே வழியில், தமது இரக்கத்தில் உங்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். அவர் இப்போது அதைச் செய்கிறார் என்றால், எடுத்துக்கொள்ளப்படுதலும் (Rapture) நியாயத்தீர்ப்பும் எவ்வளவு தூரத்தில் உள்ளது? நான் பேசுவது எத்தனை பேருக்குப் புரிகிறது? கையெழுத்து, கர்த்தராகிய இயேசுவின் வெளிப்படுதல்.

34 சற்று யோசித்துப் பாருங்கள், அவர் பூமியில் இருந்ததிலிருந்து இப்போதுதான் முதல் முறையாக இது செய்யப்படுகிறது. அவர் யூதர்களுக்கு பூமியில் தம்மை வெளிப்படுத்தியபோது, அதை எப்படிச் செய்தார்? பிலிப்பு போய் நாத்தான்வேலை ஒரு மரத்தடியில் கண்டார். அவர் இயேசுவிடம் வந்தபோது, அவர் யார் என்றும், அவர் வருவதற்கு முன்பு எங்கே இருந்தார் என்றும்

நாம் இதை முணுமுணுக்கும்போது இதை உங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு நாள் நாம் நின்றுகொண்டிருப்போம், நீங்கள் மாற்றப்படுவீர்கள். இந்த அழிவுள்ள, அற்பமான சரீரங்கள் முதியவரிலிருந்து இளைஞராகத் திரும்ப மாற்றப்படும். அவரைச் சந்திக்கவும், அவருடன் இருக்கவும், என்றென்றும் ஐக்கியம் கொள்ளவும் நாம் காற்றில் செல்வோம். ஏனென்றால், நான் வாக்குறுதியளிக்கிறேன், நான் நம்புகிறேன்,

தேவ ஆட்டுக்குட்டியே, நான் வருகிறேன்! நான் வருகிறேன்!

33 ஓ, அந்த நாளில் அது அற்புதமாக இருக்காதா? மனுஷகுமாரன் தம்மைத் தமது சபைக்கு வெளிப்படுத்துவதைக் காண இன்று வாழ்வதையிட்டு நீங்கள் மகிழ்ச்சியடைய வில்லையா? "மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில்..." அவர் என்ன செய்கிறார்? முதலில் இரக்கத்தில் தம்மை வெளிப்படுத்துகிறார். அடுத்த முறை, இரக்கத்தை நிராகரிப்பவர்களை ஆக்கினைக்குட்படுத்த அவர் நியாயத்தீர்ப்பில் தம்மை வெளிப்படுத்துகிறார். இப்போது அதற்கான நேரம்.



தரையிலிருந்து மூன்று அடி உயரத்தில் செயலிழந்தது. அவர்களுடையதோ உலகத்தைச் சுற்றிப் பயணம் செய்கிறது. அது நம்மிடம் என்ன பேசுகிறது? தேவன் தமது சபையிடம், "இங்கே வாருங்கள், நீங்கள் இங்கே வரும் வரை என்னால் எதுவும் செய்ய முடியாது" என்று சொல்கிறார். தேவன் தமது சபை தங்கள் பிரிவினைவாதத் தடைகளை உடைத்து, மகிமைக்கு உயர்த்தப்பட பரிசுத்த ஆவியின் உண்மையான ஊற்றுதலுக்காக ஒன்றுகூடி வருவதற்கு காத்துக்கொண்டிருக்கிறார். "நீ இங்கே வரும் வரை என்னால் எதுவும் செய்ய முடியாது," நாம் ஒன்றுகூடி வருவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்.

24 இயேசு சொன்னார், "மனுஷகுமாரன் பரலோகத்திலிருந்து வெளிப்படும் போது." இதைச் சொல்லி நான் முடிக்கிறேன்: மனுஷ குமாரன் இப்போது பரலோகத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கிறார். "அது சிறிது நேரம் கழித்து வருமா, சகோதரர் பிரான்ஹாம்?"

அது இப்போது இருக்கிறது. இந்தக் கூட்டத்தைப் பற்றி இதை நான் தனிப்பட்ட

முறையில் சொல்ல வேண்டியதில்லை என்று நம்புகிறேன், ஆனால் தேவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட உங்கள் ஆவி நான் பேசுவதைப் புரிந்துகொள்ள முடியும். மனுஷ குமாரன் ஏற்கனவே மகிமையிலிருந்து வந்து விட்டார், கடந்த சில வருடங்களாகத் தமது சபைக்கு இரக்கத்தில் தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார், தமது பெரிய பிரசன்னத்தை அவர்களுக்குக் காண்பிக்கிறார், அவர் பூமியில் இருந்தபோது செய்த அதே காரியங்களைச் செய்கிறார், அழிவுக்கு முன் ஆபிரகாமுக்குச் செய்தது போல தம்மை வெளிப்படுத்துகிறார். அவர் இப்போது இரக்கத்தில் வந்து, சபைக்குத் தம்மை வெளிப் படுத்துகிறார். அது பார்த்து சிரிக்கப்படுகிறது, பரியாசம் பண்ணப் படுகிறது. அடுத்த முறை அவர் தம்மை வெளிப்படுத்தும் போது, அது உலகத்தின் மீதும், தேவனை மறந்து, கிருபையின் காலத்தை... மன்னிக்கவும், கிருபையின் நாட்களை வீணடித்த தேசங்களின் மீதும் நியாயத்தீர்ப்பாக இருக்கும். ஏனென்றால் அவர்கள் தேவனை மறந்துவிட்டார்கள். அவர்கள் அங்கே கர்த்தருடைய தூதருக்குச் செய்த அதே காரியத்தை, பரியாசம் பண்ணி



சகோதரியையும் அவருடைய இரக்கத்திற்கும் கிருபைக்கும் அழைப்பதை நான் எவ்வளவு நேசிக்கிறேன். அந்த பழைய பாடல்கள் என்னை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவை எழுச்சி யூட்டுபவை. இயேசு பூமியில் இருந்தபோது, அவர் அவற்றைக் குறிப்பிட்டார். "சங்கீதங்களில் எழுதப்பட்டிருக்கவில்லையா?" என்று அவர் கேட்டார், அது பாடல்கள்.

தேவ ஆட்டுக்குட்டியே, நான் வருகிறேன்! நான் வருகிறேன்!

இதை ஒருமுறை பாடுவோம். (நீங்கள் உண்மையிலேயே அர்த்தப்படுத்தினால் உங்கள் கையை உயர்த்துவீர்களா?)

தயங்காமல் வருகிறேன்

உம் இரத்தம் எனக்காக சிந்தப் பட்டதென்றும்

நீர் என்னை உம்மிடம் வரச்சொன்னீர் என்றும் நம்பி

தேவ ஆட்டுக்குட்டியே, நான் வருகிறேன்! நான் வருகிறேன்!

சீக்கிரமாக, பரிசுத்த ஆவியினால் நிரப்பும், அப்போதுதான் சபை அங்கே செல்ல ஆயத்தமாக முடியும். ஆண்டவரே, பூமியில் உள்ளவர்களை சோதிக்க பரலோகத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட அக்கினியிலிருந்து தப்பிக்க, எல்லா மதப்பிரிவுகள் மற்றும் அமைப் புகளிலிருந்தும் விலகி, பாதுகாப்பான பேழை யாகிய கர்த்தராகிய இயேசுவின் மார்பிற்கு அவர்கள் இப்பொழுதே ஓடிவருவார்களாக... அதை அருளும், ஆண்டவரே.

நாங்கள் அவர்களை இயேசுவின் இன்ப நாமத்தில் உமக்கு ஒப்புக்கொடுக்கும்போது, துதி உமக்கே உரித்தாவதாக. ஆமென்.

32 அந்த இசையை ஒரு நிமிடம் தொடர்ந்து இசைக்கவும். ஓ, நான் அதை எவ்வளவு நேசிக்கிறேன். உங்களுக்குத் தெரியும், நான் இனி ஒரு சிறுவன் அல்ல. ஒரு நாள் நான் இந்த வேதாகமத்தை அதன் கடைசி முறையாகத் திறப்பேன். அது நடக்கும்போது நான் பிரசங்க பீடத்தில் நிற்பேன் என்று நம்புகிறேன். நான் அவரை நேசிக்கிறேன். அவர் உண்மையானவர் என்று எனக்குத் தெரியும். எனது ஏழை, தொலைந்துபோன, தளர்ந்த சகோதரனையும்



கேலி செய்கிறார்கள். ஆனால் அவர் இப்போது இரக்கத்தில் இங்கே இருக்கிறார்.

25 அவர் தேசங்களின் மீது நியாயத் தீர்ப்பில் வருவார், அவர் இரக்கத்தில் வெளிப்படுத்தப் படும்போது, ஓ, இங்கே சீக்கிரம் வாருங்கள். பிள்ளர்களே, சீக்கிரம் ஓடுங்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட, பாபிலோனிய இறையியல் அவிசுவாசச் சுவர்களிலிருந்தும் குளிர்ந்த சம்பிரதாயங்களிலிருந்தும் விலகிச் செல்லுங்கள். மனிதனால் உருவாக்கப்பட்ட இறையிய லிலிருந்து ஓடுங்கள். தேவனுடைய கிருபையின் வயல்வெளியின் நடுவில் வெளியே வாருங்கள், அங்கே இரக்கத்திற்காகக் கதறுங்கள், ஏனென்றால் அவருடைய சொந்தக் குமாரனின் இரத்தமே நமக்கு இரக்கத்தைத் தருகிறது. சந்தேகங்கள் நிறைந்த இந்த பழைய உலகத்திலிருந்து விலகிச் செல்லுங்கள். உங்கள் மூட நம்பிக்கைகளிலிருந்து விலகிச் செல்லு ங்கள். தேவனுடைய இரக்கத்தின் செய்தி யையும், அவருடைய விடுதலையின் செய்தி யையும் ஏற்றுக்கொண்டு, அவருடைய கிருபை யின் நடுவில் ஓடி, அங்கே, "ஓ இயேசுவே, தேவனுடைய குமாரனே, என்மேல் இரக்க

மாயிரும்" என்று கதறுங்கள். ஏனென்றால் மனிதனால் உருவாக்கப்பட்ட இந்தக் கோட்பாடுகளின் சுவர்கள் இடிந்து விழப்போகின்றன, அவிசுவாச உலகத்துடன் அழியப்போகின்றன. "விசுவாசியாதவர்கள், விசுவாசியாதவர்களுடனே அழிந்தார்கள். அவிசுவாச உலகம் விசுவாசியாதவர்களுடனே அழிந்தது." ஆனால் நீதிமான் லோத்து வெளியே எடுக்கப்பட்டார், நோவாவும் அப்படியே. நாம் ஒரு கணம் ஜெபிக்கும் போது அதைச் சிந்தித்துப் பாருங்கள்.

26 இப்போது, ஆண்களே, பெண்களே, உன்னதமான தேவனுடைய ஊழியனாகவும், இன்றிரவு உங்கள் சகோதரனாகவும், "ஒரு வேளை இது மனதை வாசிப்பதாக (mind reading) இருக்கலாம்" என்று சொல்லும் சந்தேகவாதிகள், அவிசுவாசம் என்ற நீங்கள் நின்று கொண்டிருக்கும் ஒவ்வொரு சுவரிலிருந்தும் வெளியே வரும்படி நான் உங்களிடம் கெஞ்சுகிறேன். ஆபிரகாம் அப்படி நினைத்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?

"நான் ஒரு மெதடிஸ்ட். நான் ஒரு கத்தோலிக்கன். நான் ஒரு பெந்தேகோஸ்தே"



செலுத்துகிறோம். அவர்களில் பலர், ஆண்டவரே, தங்கள் கைகளை உயர்த்தி, "தேவனே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்" என்று சொன்ன பாவிகள். "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" என்று நீர் உமது வார்த்தையில் சொல்லியிருக்கிறீர். அவர்களுக்காக உமக்கு நன்றி, ஆண்டவரே. அவர்கள் இப்போது உம்முடையவர்கள்.

31 வலை வீசப்பட்டிருக்கிறது, சுவிசேஷ வலை. அது எதைப் பிடித்தது என்று எனக்குத் தெரியாது. அது ஆமைகளைப் பிடித்திருக்கலாம், பாம்புகளைப் பிடித்திருக்கலாம், பல்லிகளைப் பிடித்திருக்கலாம், ஆனால் நிச்சயமாக அது சில மீன்களையும் பிடித்திருக்கிறது. ஜனங்களின் இருதயங்களை நீர் அறிந்திருக்கிறீர். எஜமானரின் பந்தியில் இப்போது பயன்படுத்துவதற்கு ஒவ்வொருவரும் மீன்களாக இருந்தார்கள் என்று நான் நம்ப விரும்புகிறேன். அதை அருளும், ஆண்டவரே.

இரட்சிக்கப்படும் வரை, கர்த்தருடைய பழைய காலத்து வார்த்தை ஒருபோதும் அதன் வல்லமையை இழக்காது. அந்தக் கவிஞர் அந்தப் பாடலை எழுதியபோது, பிதாவே, அவர் எதை எழுதுகிறார் என்று அவருக்குத் தெரிந்திருக்குமா? கடைசி நபர் உள்ளே கொண்டுவரப்படும்போது, வார்த்தை இனி பலனுள்ளதாக இருக்காது, அது பூமி முழுவதும் பன்றிகளுக்கு முன் முத்துக்களைப் போடுவது போல இருக்கும். ஆனால் எங்கள் தேசம் நியாயத்தீர்ப்பின் அலையின் கீழ் சவாரி செய்வதை நாங்கள் பார்க்கும்போது, கடலுக்கு அப்பால், அங்கே, கருப்பு, மஞ்சள் மற்றும் பழுப்பு நிற கரங்கள் நீட்டப்பட்டு இரக்கத்திற்காகக் கதறுவதை நாங்கள் காண்கிறோம், எங்கள் இருதயங்கள் எங்களுக்குள் கலங்குகின்றன. வருகிற சனிக் கிழமையன்று இந்தப் படத்தைப் பார்க்கப் போகிற மக்கள், நீர் தாமதித்தால், அவர்கள் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளட்டும்.

இன்றிரவு தங்கள் கைகளை உயர்த்திய இவர்களுக்காக உமது இரக்கத்திற்காக, மகா பரிசுத்த தேவனே, நாங்கள் உமக்கு நன்றி



என்று சொல்லும் அந்த பழைய மனிதனால் உருவாக்கப்பட்ட சுவர்களிலிருந்து வெளியே வாருங்கள். அவையெல்லாம் மனிதனால் உருவாக்கப் பட்ட சுவர்கள். பெரிய பூகம்பம் நடப்பதற்கு முன், அதிலிருந்து விலகி தேவனுடைய கிருபையின் நடுப்பகுதிக்கு உங்களை அழைக்கும் ஆவியின் அந்த இழுப்பை உங்களால் உணர முடியவில்லையா? அந்தச் சிறிய பறவைகள், ஏதோ ஒன்றை உணர்ந்தன, அவை அதைப் பின்பற்றின. தேவன் உங்களுக்கு ஏதோ ஒன்றைக் காட்டுகிறார். அவரை, கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுங்கள். உங்கள் தலைகள் தாழ்த்தப் பட்டிருக்கட்டும்.

பாவியான நண்பனே, இன்றிரவு கிறிஸ்துவிடம் உங்கள் கையை உயர்த்தி, "தேவனே, என்மேல் இரக்கமாயிரும். முடிவு காலத்தில் இந்த நிலையில் நிற்க நான் விரும்பவில்லை" என்று சொல்வீர்களா? நீங்கள் உங்கள் கையை உயர்த்துவீர்களா? "சகோதரர் பிரான்ஹாம், எனக்காக ஜெபம் செய்யுங்கள். உண்மையாகவே, தேவனுடைய பார்வையில், நான் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நிலையில்

சாக நான் விரும்பவில்லை" என்று சொல்லுங்கள்.

நீங்கள் இங்கே இருக்கிறீர்களா? உங்கள் கையை மட்டும் உயர்த்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. அதற்குத் தைரியம் தேவை. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஐயா. இங்கே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஐயா. இந்தப் பக்கத்தில், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி.

நீங்கள் சொல்கிறீர்கள், "சகோதரர் பிரான்ஹாம்..." என் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அங்கே பின்னால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஐயா.

27 ஓ, கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர் கண்களைத் திறக்கிறார். அவர் அதைச் செய்வதில் நீங்கள் மகிழ்ச்சியடையவில்லையா? ஏனென்றால் நினைவில் கொள்ளுங்கள், "என் பிதா அழைத்தாலொழிய ஒருவனும் தன் கையை உயர்த்த முடியாது. அவர்



ஆசீர்வதிப்பாராக. அது சரி. அவர் ஒவ்வொரு கையையும் பார்க்கிறார்.

இங்கே எத்தனை பேர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஆனால் ஒருபோதும் மறுபடியும் பிறக்காதவர்கள், பரிசுத்த ஆவியை ஒருபோதும் பெறாதவர்கள்? "நீங்கள் என்னை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டாலும், நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாவிட்டால், நீங்கள் ஒருபோதும் எடுத்துக் கொள்ளுதலில் (Rapture) போக மாட்டீர்கள்." அது வேதம். நீங்கள் மறுபடியும் பிறந்தாலொழிய தேவனுடைய ராஜ்யத்தைக் காண முடியாது. தேவன் உங்களைப் புதிய பிறப்பால் நிரப்ப வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், உங்கள் கைகளை உயர்த்தி, "தேவனே, என்மேல் இரக்கமாயிரும். உம்முடைய ஆவியை என்மேல் அனுப்பும்" என்று சொல்வதைப் பார்ப்போம். அது சரி, திரளான கைகள். இப்போது, நாம் ஜெபிக்கப் போகிறோம்.

30 அமைதியாகவும் பயபக்தியுடனும்... தேவனே, மீட்கப்பட்ட தேவனுடைய சபை அனைத்தும் இனி பாவம் செய்யாதபடி

சொல்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, வாலிபரே.

"நான் இப்போது உம்மை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன். அந்த நாளில், எடுத்துக் கொள்ளுதலில் (Rapture) நீர் என்னை மகிமைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் போக வேண்டும் என்று விரும்புகிறேன். ஏனென்றால் இது இன்னும் நீண்ட காலம் நீடிக்காது என்று எனக்குத் தெரியும்; நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம்."

29 பின்மாற்றக்காரர்கள் யாராவது உங்கள் கைகளை உயர்த்துவீர்களா? "தேவனே, என்மேல் இரக்கமாயிரும். என்னால் முடிந்தவரை வேகமாக ராஜ்யத்திற்குத் திரும்பி ஓட என்னை அனுமதியும். நான் இந்தப் பழைய சுவர்களுக்கு அருகில் நீண்ட காலம் இருந்துவிட்டேன். ஆண்டவரே, நான் மீண்டும் வீட்டிற்கு வர விரும்புகிறேன். நான் இப்போது என் வழியில் இருக்கிறேன்" என்று சொல்லுங்கள். நீங்கள் உங்கள் கையை உயர்த்துவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை



முன்னறிந்தவர்களை அழைத்தார். அவர் அழைத்தவர்களை நீதிமான்களாக்கினார். அவர் நீதிமான்களாக்கினவர்களை மகிமைப்படுத்தி னார்." இந்த பூமியின் ஈர்ப்பு விசையை விட வலிமையான ஒன்று உங்களுக்குள் இருந்தா லொழிய நீங்கள் உங்கள் கையை உயர்த்த முடியாது. ஈர்ப்பு விசை உங்கள் கைகளைக் கீழே இழுத்துப்பிடிக்கும், அது இயற்கையானது, அது அறிவியல். ஆனால் நீங்கள் தவறாக இருக்கிறீர்கள் என்றும், உங்களுக்குக் கிறிஸ்து வேண்டும் என்றும் சொல்லும் ஒரு ஆவி உங்களுக்குள் இருக்கிறது; நீங்கள் அந்த விதிகளை மீறி, வானத்தையும் பூமியையும் படைத்தவருக்கு நேராக உங்கள் கையை உயர்த்துகிறீர்கள். அவருடைய பிரசன்னம் அருகில் இருக்கும்போது, கையை உயர்த்தாத பாவியான நண்பனே, பதினைந்து அல்லது இருபது பேர் ஏற்கனவே தங்கள் கைகளை உயர்த்தியிருக்கிறார்கள், நீங்கள் உங்கள் கைகளை உயர்த்துவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சிறியவரே. பால்கனியில்?

"சரி, எனக்குப் பக்கத்தில் யாரோ அமர்ந்திருக்கிறார்கள், சகோதரர் பிரான்ஹாம்"

என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், ஓ, ஆம், உங்களுக்குப் பக்கத்தில் யாரோ அமர்ந்தி ருக்கிறார். அது கர்த்தருடைய தூதர். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட பிறகு, அதை மீறி வெளியேறுவதை விட, உங்களுக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பவரைப் பற்றியோ அல்லது உங்கள் சமூக அந்தஸ்தைப் பற்றியோ நீங்கள் அதிகம் பயப்படுகிறீர்களா? நான் உங்களைச் சபையில் சேரும்படி கேட்கவில்லை; இரக்கத்திற்காக ஓடி வரும்படி நான் உங்களைக் கேட்கிறேன். தேவன் சொல்கிறார், "இங்கே வாருங்கள், நீங்கள் இங்கே வரும் வரை என்னால் எதுவும் செய்ய முடியாது."

28 நாம் ஜெபிப்பதற்கு முன் வேறு யாராவது கையை உயர்த்துவார்களா? இங்கே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. அங்கே பின்னால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. அங்கே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஐயா. இன்னும் சிறிது நேரம் காத்திருக்கிறேன். இங்கே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஐயா. அங்கே,



தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, வாலிபரே. இங்கே அமர்ந்திருக்கும் சகோதரி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. முன் வரிசையில் உள்ள இந்த வாலிபர், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கையை உயர்த்தாத வேறு யாராவது இப்போது, "ஓ தேவனே, என்மேல் இரக்கமாயிரும். சுவரில் உள்ள கையெழுத்தை நான் இப்போது பார்க்கிறேன். என் இருக்கையில் ஏதோ ஒன்று அமர்ந்துகொண்டு, என்னை இழுத்து, 'இது உனக்கான நேரம். நீ ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்கிறாய், ஆனால் நீ அப்படி இல்லை' என்று சொல்கிறது" என்று சொல்லுங்கள்.

"ஓ, எனக்கு வெட்கமாக இருக்கிறது..." இப்போது வெட்கப்படாதீர்கள். அவர் வரும்போது நீங்கள் என்னவாக இருப்பீர்கள்? அது மிகவும் தாமதமாகிவிடும். இப்பொழுதே வாருங்கள்.

முடிப்பதற்கு முன் இன்னும் ஒருவர் கையை உயர்த்துவாரா? "ஓ தேவனே, என் பிதாவே, என்மேல் இரக்கமாயிரும்" என்று